ஆறாவது வருடத்தில் தமிழர் தகவல்

FREE ISSUE

August 2008

தமிழர் தகவல்

லண்டன்

# தகவல்

London Tamil's Information


மிக விரைவில்
கிழக்கு லண்டனில்

**திருமுருகன் அறிவகம்**

தமிழ் புத்தகங்கள்
தமிழ் நாட்டு விலைக்கே
விற்கப்படும்







**0333 123 0123**
நீங்கள் தெரிந்திருக்க
வேண்டிய ஒரு தமிழ்
தொலைபேசி இலக்கம்


மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest


ஆயிரங்காலத்துப் பயிருக்கு ஆண்டாண்டு
பாரம்பரியம் உள்ள தங்க நகைகள்
Lakshmis Jewellers
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600
Fax : 020 8470 3448

# தமிழர் தகவல் Tamils' Information

திருவள்ளுவர் ஆண்டு 2039
சர்வதாரி — ஆவணி

மலர் : 06

இதழ் : 62
ஆகஸ்ட் 2008

**“ பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல்” – குறள்**

“பொங்கு தமிழருக்கு இன்னல் நேர்ந்தால் சங்காரம் நிசம் என்று சங்கே முழங்கு” (பாரதிதாசன்)

பிரித்தானியாவின் லண்டன் ‘வேல்’ பகுதியில் மாபெரும் மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற ‘பொங்கு தமிழ்’ நிகழ்வு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. எங்கள் தொப்பூழ் கொடி உறவுகளுக்காக, எம்மவர் விடுத்த குரல் லண்டனையே அதிர வைத்திருக்கிறது.

நிகழ்வு நடைபெற்ற மைதானத்தை அடைவதற்கே ஏறத்தாழ ஒன்றரை மணி நேரமாயிற்று. அந்தளவுக்கு மக்கள் வாகனங்களில் சாரிசாரியாகப் பயணித்துக் கொண்டிருந்தனர். சென்னையில் 80ஆம் ஆண்டளவில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மகாநாட்டுக்கு வர்ணனைக் கொடுத்த கலைஞர் கருணாநிதி, “தேர் ஊர்ந்து வருவதுபோல் கார் (Car) ஊர்ந்து வந்த மக்கள் கூட்டம்” என்றும், “அவிழ்த்துவிட்ட நெல்லிக்காய் மூடை போல், அங்கும் இங்கும் ஓடிய மக்கள் கூட்டம்” என்றும் குறிப்பிட்டிருந்ததை அன்று நிதர்சனமாகக் கண்டோம். மைதானத்தை வண்டி நெரிசலையும் தாண்டி சென்றடைந்தபோது, மஞ்சள், சிகப்பு வர்ணங்களிலான கொடிகள் பறக்கவிடப்பட்ட பிரம்மாண்டமான மேடை அமைப்பு, ஓர் பிரமிப்பையே ஏற்படுத்தியது. திருச்செந்தூர் கடற்கரை மக்கள் கூட்டம் பற்றி, “கடலா, கடல் அலையா” என்று கவி இயற்றிய கண்ணதாசனை மீறி, இந்தப் பொங்கு தமிழ் கூட்டம் பற்றி வர்ணிப்பதற்கு வேறு வார்த்தைகளே கிடையாது.

‘பொங்கு தமிழ்’ எழுச்சியில் பலர் பேசினார்கள். ஆளும் கட்சியான தொழிற்கட்சி, எதிர்கட்சிகளில் ஒன்றாகிய லிபரல் கட்சி, ஆகியவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றினார்கள். இலங்கையின் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் ஜெயானந்த மூர்த்தி, கஜேந்திரன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர். மேடை நிகழ்ச்சிகளில் பிள்ளைகளின் நடனம் மனதைத் தொட்டது. உரைகள் உட்பட நிகழ்ச்சிகள் அனைத்தும் தமிழ் மணத்தையே கமழ்ந்து கொண்டிருந்தன. மேடையில் குழுமிய ஆண், பெண் சங்கமித்த இளையோர், “We want Tamil Elam” என்று குரல் கிளப்ப, அதனைத் தொடர்ந்த நாற்பதினாயிரம் மக்கள் குரல்கள் எதிரொலிக்க, ஓர் புத்துணர்வு எம்மிடையே பீறிட்டது. எமக்கென்று ஓர் நாடு உதயமாவது வெகுதூரத்தில் இல்லையென்பது தெட்டத் தெளிவாகப்பட்டது. இலங்கையின் வரைபடத்தில் ஓர் புதிய படம் எழுதப்படப்போகின்றது என்பதை இப்பொங்குதமிழ் நிகழ்வு எதிர்வு கூறியுள்ளது.

பொங்கு தமிழ் நிகழ்வானது சாதித்துள்ளதை குறிப்பிட்டே தீரவேண்டும். எமது பிரச்சினை இன்று சர்வதேச அகலக் கால்களுக்குள் நுழைந்து, தனியிடத்தை தேடிக்கொண்டுள்ளது. “புலம் பெயர் தமிழர்கள் ஈழப்பிரச்சினையை, சர்வதேசமளவில் எடுத்துச் செல்லத் தவறிவிட்டனர்” என்று பேராசிரியர் சிவத்தம்பி போன்றோர் கூறியவற்றை லண்டன் மட்டுமல்லாது அகில உலக ரீதியில் முன்னெடுக்கப்படும் பொங்கு தமிழ் நிகழ்வுகள் தவிடுபொடியாக்கிவிட்டன.

சுனாமியை மீறி பிரவாகித்துள்ள பொங்கு தமிழ் உணர்வு அடங்கப்போவதில்லை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் உருவான பொங்குதமிழ் இங்கு கனடா, அவுஸ்ரேலியா, சுவிஸ், லண்டன் என்று பெருக்கெடுத்து ஐ.நா வாசலையே தொட்டுநிற்கிறது. “எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார். இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே.....” என்று கவி பாடிய பாரதிதாசனின் கூற்று, அரசியல் சதுரங்கம் ஆடுவோர்க்கு பொங்குதமிழ் மூலமாக விடுக்கப்பட்ட தகவலேயாகும்.

சிங்களத்துடன் சேர்ந்து வாழவே தமிழ்த்தலைவர்கள் முதலில் ஆசைப்பட்டனர். ஆங்கில நாட்டுக்குச் சென்று இலங்கையரின் குறையை வெள்ளையரிடம் முறைப்பாடு செய்த, தமிழ்த்தலைவரான சேர்.பொன். இராமநாதன் நாடு திரும்பியபோது சிங்களவர் அவரை தேரில் வைத்து இழுத்தனர். பெருமைப்படுத்தினர்.

இதன்பின் திரு பொன்னம்பலம் ஐம்பதுக்கம்பது பேரம் பேசினார். பின்னர் தந்தை செல்வா ஒப்பந்தம் செய்தார். கிழித்தனர். சமரசம், சமஷ்டி என்றெல்லாம் ஜனநாயகமாகவே அவர் செயற்பட்டார். சிங்களம் தமிழரை அடித்தது; எரித்தது. மகாபாரதக் கோட்பாட்டின் அடிப்படையில் தந்தை, “தமிழர் வசிப்பதற்கு வீடு” கேட்டார். சிங்களம் அசையவேயில்லை. தமிழர் குரல்வளை, மேலும் சிங்களத்தின் கைப்பிடியில் நெரிக்கப்பட்டது.

“பொறுத்தது போதும்.... பொங்கி எழு” என்று சூரியத்தேவன் அறைகூவல் விடுத்தார் பொங்கி எழுந்த தமிழர் பொங்கு தமிழ் படைத்தனர். பொங்குதமிழ், சங்கத்தமிழை விட ஓங்கி ஒலிக்கத் தொடங்கிவிட்டது!

பொங்குதமிழ் நிகழ்வில் ஈழத்தின் ஆஸ்தானக் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் தகவல், அவர் குரல் மூலம் பதிவாகி ஒலிநாடா வாயிலாக ஒளிபரப்பு ச் செய்யப்பட்டது.

“விடுதலை என்பது பூப்பறித்தல் அல்ல. விடுதலை என்பது புல்லாங்குழல் வாசித்தலும் அல்ல. அது நிலவை நோக்கிய பயணம்...”என்று புதுவை இரத்தினதுரை விடுத்த செய்தி, இப்போதும் எமது காதுகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கிறது.

**ச. சிறீரங்கன்**

முகவரி :

41, HADDINGTON ROAD,
BROMLEY,
KENT BR1 5RG, U.K.

தொலைபேசி :

Email :
**jothy5@yahoo.co.uk**

வெளியீடு :

திருமுருகன் அறிவகம்
லண்டன்

Thirumurugan Arivagam
London

ஆசிரியர் :
அரவிந்தன்

Editor :
Aravindan

கணினி, அச்சுப்பதிப்பு :
கமலா ஆர்ட்ஸ்

Computer Layout :
Kamala Artz

படைப்புகள்
ஆக்கியோரின்
உரிமைகளே

4000 பிரதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டையில்

# பொங்கு தமிழ் பற்றிய மக்களின் கருத்து...



தமிழ் ஈழத்தில் விலங்கை உடைத்துக் கொண்டு உருவான பொங்கு தமிழ் என்று தமிழர்கள் வாழும் உலகெல்லாம் கொண்டாடப்பட்டு வருவது தமிழர்களின் எழுச்சியையும், உணர்வையும் வெளிப்படுத்துகிறது. இதற்கு லண்டன் தமிழர்கள் சளைத்தவர்கள் அல்ல. லண்டனில் 12.07.2008ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு இவ்விழா குதூகலமாகத் தொடங்கப்பட்டது. நாற்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். ஒவ்வொருவரும் தமிழ் ஈழ உணர்வையும், உணர்ச்சியையும் வெளிப் படுத்தினார்கள். இச்சிறப்பினைக் கண்ட சிறப்புப் பேச்சாளர்கள், பா. உறுப்பினர்கள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், வெளிநாடுகளிலிருந்து வந்த பேச்சாளர்கள் அனைவரும் தமிழ் மக்களின் அவலங்களை நன்குணர்ந்து தமிழ் ஈழத்திற்கு குரல் கொடுத்தார்கள். நாம் அவர்களுக்கு நன்றி கூறுவோம்.




அரங்கத்தில் எழுச்சியான கலைநிகழ்ச்சிகள், பிரமாண்டமான தமிழ் ஈழ வரைபடம், இவைகளை எல்லாம் கண்டு களித்துக் கொண்டிருந்த மக்கள் மத்தியில் புது உணர்வும், எழுச்சியும் தாண்டவமாடியது. ஒவ்வொருவரும் தமிழ் ஈழம் வெகு தொலைவில் இல்லை என்று உணர்வு பூர்வமாக பேசிக்கொண்டார்கள். இடையிடையே மழையும், வெயிலும் நிகழ்ச்சிகளுக்கு இடையூறாக இருந்தது. மக்கள் எதையும் பொருட்படுத்தாமல் விழாவைச் சிறப்பித்தார்கள். விழா அமைப்பாளர்கள் விழாவை மிகத் திறம்பட ஒழுங்கு செய்திருந்தார்கள். தொண்டர்கள் தம் பணியை திறம்பட செய்தார்கள். மக்களும் இவர்களுக்கு நல்லாதரவு கொடுத்து சிறப்பித்தார்கள். எல்லோருக்கும் எமது பாராட்டுகளும் நன்றிகளும் உரித்தாகட்டும். விழா நிறைவு பெற்று வெளியேறும்போது மக்கள் மத்தியில் ......

– இலுப்பையூரான்



லண்டனில் தமிழர்கள் பொங்கு தமிழாக பொங்கி எழுந்தது கண்டேன். அன்று அவர்களுடன் நானும் கலந்து கொண்டேன் என்பதை நினைக்கும்போதே மகிழ்ச்சியாக இருக்கிறது. பல ஆயிரம்பேர் கலந்து கொண்ட நிகழ்வு சிறுவர் முதல் வயது முதிர்ந்தோர் வரை எல்லோரும் பல ஊர்களிலிருந்தும் வந்து கலந்து கொண்டார்கள். அங்கே நான் பார்த்த பல உறவுகள் கடந்த 24 வருடங்களாக எல்லா நிகழ்வுகளிலும் கலந்து கொள்கின்ற முகங்கள். பல ஆயிரம் புதிய முகங்கள். இது பொங்கு தமிழின் வெற்றி.

தமிழா தமிழா நாளை நம் நாளே.

– யோகா செல்லத்துரை




*அட்டைப் பட உதவி : சாந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கு தமிழ் 2008



இப்பக்கத்தின் விளம்பரதாரர்

**BEST FOOD**

SUPERMARKET

5-வது கிளை மிக விரைவில்
கிழக்கு லண்டன் தமிழ் மக்களின் வசதிக்கேற்ப
மாபெரும் காட்சியறையில்



11-13 Ealing Road
Wembley
Middlesex HA0 4AA

249 Northolt Road Harrow
Middlesex HA2 8HR
Tel : 020 8423 9933

259 - 261, London Road
West Croydon
Surrey CR0 2RL
Tel : 020 8684 6269/ Fax : 684 4677

364 - 366, Bath Road, Hounslow
Middlesex TW4 7HT
Tel : 020 8577 6002
Fax : 020 8570 2323

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கு தமிழ் 2008




இப்பக்கத்தின் விளம்பரதாரர்

# BEST FOOD

**SUPERMARKET**



**5-வது கிளை மிக விரைவில்**
**கிழக்கு லண்டன் தமிழ் மக்களின் வசதிக்கேற்ப**
**மாபெரும் காட்சியறையில்**

| | |
|---|---|
| 11-13 Ealing Road<br>Wembley<br>Middlesex HA0 4AA | 249 Northolt Road Harrow<br>Middlesex HA2 8HR<br>Tel : 020 8423 9933 |
| 259 - 261, London Road<br>West Croydon<br>Surrey CR0 2RL<br>Tel : 020 8684 6269/ Fax : 684 4677 | 364 - 366, Bath Road, Hounslow<br>Middlesex TW4 7HT<br>Tel : 020 8577 6002<br>Fax : 020 8570 2323 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடுக பேடிகளே !

வழிவழி மறவர்கள் குலமென
வாழ்ந்தவர் தமிழ்நாட்டில்
இழிநிலையொடு தமிழ் பிறவிகள்
இருப்பதை என்னென்பேன்!
விழியெனும் அரசை இழந்தனர்
வீழ்ந்தனர்! வீழ்ந்தனரே!
புலியென இனிநாம் புதுவழி
புகுவோம்! புகுவோமே!

அன்னையை உயிர்நிகர் தமிழினை
அடித்தெவன் போட்டானோ?
புன்னகை இழந்தவள் கண்மழை
பொழிந்திட லானானோ?

விண்ணகம் இடிபட மறமகன்
வெடித்தெழ மாட்டானோ?
மண்ணகம் இடிபடும் ஒருநாள்
மாற்றலர் காணாரோ?

நாளைய வளமிகு தமிழக
நாட்டினை நாம் செய்வோம்!
கோழைகள் என்பவர் ஓடுக!
ஓடுக பேடிகளே!
மூலையில் எலியென இனியும்
முடங்குதல் இயலுமொடா?
சூளுரை செய்துடனே எழு!
சுழன்றெழு வெம்புயலே!

கவிஞர் காசி ஆனந்தன்


## இறைமாட்சி

*செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்*
*கவிகைக்கீழ்த் தங்கும் உலகு* (குறள்: 389)


குறை கூறுவோரின் சொற்களைச் செவி வெறுக்கும் நிலையிலும் பொறுக்கும் பண்புடைய அரசனின், குடை நிழலில் உலகம் தங்கும்.

*கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்*
*உடையவனாம் வேந்தர்க் கொளி.* (குறள்: 390)

கொடை, கருணை, செங்கோல், குடியோம்பல் ஆகிய நான்கும் உடைய அரசன் அரசருக்கெல்லாம் விளக்குப் போன்றவன்.



**மாதமிரு திருக்குறள் கற்போம்**




சிவஸ்ரீ பிச்சை குருக்கள் அவர்களுக்கு செப்டம்பர் மாதம் 5, 6ஆம் தேதிகளில் ஷஷ்டியப்த பூர்த்தி நடைபெற இருக்கிறது. செப்டம்பர் மாத இதழ் பிச்சை குருக்கள் அவர்களை பற்றிய செய்திகளுடன் விசேட பக்கங்கள் கொண்ட இதழாக வர இருக்கிறது.




அண்மையில் லண்டனில் பொன்மாலைப் பொழுது நிகழ்ச்சியை தயாரித்து அதற்கான உதயம் 2008 என்ற மலரை வெளியிட்டிருந்தார்கள்.

இந்த மலரை தயாரித்தவர் நித்யா மகிந்தன் அவர்கள். இந்த மலரில் எனக்கு பிடித்த ஒரு விடயம் அவர் தனது தந்தையாரை கௌரவப் படுத்தியுள்ளதுதான். இது தமிழர் தகவலின் நெஞ்சைத் தொட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கு தமிழ் 2008



இப்பக்கத்திற்கு ஆதரவளித்தவர்கள்

**BEST FOOD**

SUPERMARKET

**5-வது கிளை மிக விரைவில்**

**கிழக்கு லண்டன் தமிழ் மக்களின் வசதிக்கேற்ப**

**மாபெரும் காட்சியறையில்**

| | |
|---|---|
| 11-13 Ealing Road<br>Wembley<br>Middlesex HAO 4AA | 249 Northolt Road Harrow<br>Middlesex HA2 8HR<br>Tel : 020 8423 9933 |
| 259 - 261, London Road<br>West Croydon<br>Surrey CRO 2RL<br>Tel : 020 8684 6269/ Fax : 684 4677 | 364 - 366, Bath Road, Hounslow<br>Middlesex TW4 7HT<br>Tel : 020 8577 6002<br>Fax : 020 8570 2323 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Ayngaran International

ஐங்கரன் தொலைக்காட்சியில்
கலைஞர் தொலைக்காட்சி தற்போது
இலவசமாக காண்பிக்கப்படுகிறது




உலகம் முழுவதும்
**குசேலன்** திரைப்படம்

1.Film: Muniyandi Vilangiyal Moondramaandu
Cast: Bharath, Thamarai, Vadivelu, Nasser
Direction: Thirumurugan
Music: Vidyasagar
Releases July 2008




2.Film:Jeyam Kondaan
Cast: Vinay, Bhavana, Lekha Washington, Vivek, Santhanam,
Direction: R Kannan
Music: Vidyasagar
Release: July 2008

3.Film:Sathyam
Cast: Vishal, Nayanthara, Upendra, Premji Gangai Amaran
Direction: Rajasekhar
Music: Harris Jayaraj
Release: July 2008

4.Film:Dhaam Dhoom
Cast: Jeyam Ravi, Lashmi Rai and others
Direction: Jeeva
Music: Harris Jayaraj
Release: August 2008

5.Film:Kuselan
Cast: Rajini, Pasupathy, Nayantara, Meena, Mamta Mohandas,
Direction: P Vasu
Music: G V Prakash
Release: August 2008

30 High Street, Collierswood
London SW 19 2AB
UNITED KINGDOM
Tel : 00 44 (0) 208 540 1500
Fax : 00 44 (0) 208 543 8400
Email : shop@ayngaran.com

Unit 19, Riverside Business Park
Lyon Road, Wimbledn
London SW19 2RL
UNITED KINGDOM
Tel : 00 44 (0) 208 543 4477
Fax : 00 44 (0) 208 543 4466
Email : sales@ayngaran.com

367 High Street North
East Ham
London E12 6PG
UNITED KINGDOM
Tel : 00 44 (0) 208 471 3111
00 44 (0) 208 471 3133

Ayngaran நான்காவது கிளை

11-13 Ealing Road Wembley Middlesex HAO 4AA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுள் கடன்

ஆண்டவன் உயிரினங்களைப் படைத்தார். அதன் பிறகு அந்த உயிரினங்களுக்கெல்லாம் ஆயுள் காலம் எவ்வளவு என்பதை முடிவு செய்ய வேண்டியிருந்தது.

அனைத்து உயிர்களையும் சமமாகவே படைத்திருக்கிறோம். அப்படி இருக்கும் போது அவற்றின் ஆயுள் காலத்தில் மட்டும் வேறுபாடு எதற்காக? என்று நினைத்தார். எனவே எல்லாவற்றுக்கும் சராசரியாக முப்பது வயது என்று முடிவு செய்தார்.

நான்கு உயிரினங்களுக்கு மட்டும் இந்த முடிவில் திருப்தி ஏற்படவில்லை. அவை ஆண்டவனிடம் முறையிட விரும்பின.

முதலில் கழுதை வந்து நின்றது. ''ஆண்டவனே! நான் வாழ்நாள் முழுவதும் பொதி சுமந்து காலம் தள்ள வேண்டியவன். என் ஆயுள் முப்பது வருடம் என்பது அதிகமாகத் தோன்றுகிறது. அதைக் கொஞ்சம் குறைத்தால் நல்லது!'' என்றது.

ஆண்டவன் பார்த்தார். அதன் ஆயுளை 18 ஆண்டுகளாகக் குறைத்துவிட்டார்.

அடுத்து நாய் வந்து நின்றது. ''ஆண்டவா ! என் பிழைப்பே நாய்ப் பிழைப்பு! எனக்கு எதற்கு முப்பது வருடம்?'' என்று கேட்டது. ''சரி! உன் ஆயுளை 12 வருடங்களாகக் குறைத்து விடுகிறேன்'' என்றார் கடவுள்.

அடுத்து குரங்கு வந்து நின்றது. ''சுவாமி! எனது சேஷ்டைகள் எப்படிப்பட்டவை என்பதைத் தாங்கள் நன்றாக அறிவீர்கள். எப்பொழுதும் மரத்திலும் கிளையிலும் தொங்கிக் கொண்டிருக்கப் போகிறேன். எனக்கு எதற்கு முப்பது வருடம்?'' என்று கேட்டது. உடனே கடவுள் ''நீ சொல்வது நியாயம்தான்! உனது ஆயுள் 10 வருடங்கள் என்று முடிவு செய்தார் கடவுள்.

இறுதியாக மனிதன் வந்து நின்றான். ''கடவுளே! எனக்கு முப்பது வருடம் போதாது. நான் இந்த உலகில் அனுபவிக்க வேண்டியவை அதிகம். எனவே ஆயுளைக் கொஞ்சம் அதிகப்படுத்திக் கொடுத்தால் நல்லது'' என்றான்.

கடவுள் யோசித்தார் கழுதையிடம் குறைந்த 12 வருடம், நாயிடம் குறைந்த 18 வருடம், குரங்கிடம் குறைந்த 20 வருடம் ஆகிய அனைத்தையும் சேர்த்து மனிதனிடம் கொடுத்துவிட்டார்.

பிரச்சினை தீர்ந்தது கடவுளுக்கு.

மனிதனுக்கு பிரச்சினை ஆரம்பமாயிற்று. ஆமாம்! அதன் பலனை இப்போது அனுபவிக்கிறான்.

ஆண்டவன் அவனுக்கென்று கொடுத்த முப்பது வருடங்கள் அவன் மகிழ்ச்சியாக வாழ்கிறான். அது அவனுக்கென்று விதிக்கப்பட்ட ஆயுள். அடுத்த 12 வருடம் கழுதையிடமிருந்து வாங்கியது. அதனால் அந்தச் சமயத்தில் கழுதை மாதிரி குடும்ப பாரத்தைச் சுமக்கிறான்.

அடுத்த 18 வருடம் நாயிடமிருந்து வாங்கியது அல்லவா. அந்த சமயத்தில் அவன் சொத்து சேர்ப்பதற்காக அல்லது சேர்த்த சொத்தைக் காப்பதற்காக நாய் மாதிரி அலைகிறான்.

அடுத்த 20 வருடம் குரங்கிடமிருந்து வாங்கியது. அந்தச் சமயத்தில் இவன் மரியாதை இழந்து யார் என்ன சொன்னாலும் அவர்கள் சொற்படி ஆட வேண்டிய கடமை.

அன்றைக்கு வாங்கிய ஆயுள் கடனை இன்றைக்கு இந்த விதமாகத் தீர்த்துக் கொள்கிறான் மனிதன்.

மேலே நாம் பார்த்தது மனித வாழ்க்கையைச் சித்தரிக்கும் ஒரு கற்பனைக் கதை.

–தென்கச்சி சுவாமிநாதன்

## நம்பிக்கை மூலை

ஆழ்ந்த அமைதியை வெளிப்படுத்தும் ஓவியத்திற்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசு என்று அந்த அரசன் அறிவித்திருந்தான். ஆயிரக்கணக்கான ஓவியங்களிலிருந்து இறுதிச் சுற்றுக்கு இரண்டு மட்டுமே தேறின.

முதல் ஓவியத்தில் அழகான நதிக்கரை. அருமையான மலைத்தொடர். வெண் மேகங்ளின் சஞ்சாரம். அமைதியின் அற்புதமான வெளிப்பாடு.

அடுத்த ஓவியத்திலோ, மழையும் புயல் அறிகுறியும் சூழ்ந்த பிரதேசம். மின்னல் கீற்றுக்கள். மலையிலிருந்து சீறிப்பாயும் அருவி. ஓர் ஓரத்தில், பாறையில் முளைத்த புதரொன்றில் பறவை அமைதியாக கூடு கட்டிக்கொண்டிருந்தது.

இரண்டாவது ஓவியத்திற்குத்தான் அரசன் பரிசளித்தான். அமைதி என்பது வெளிச்சூழல் அல்ல. பதட்டமான சூழ்நிலையிலும் பதறாமல் இருக்கும் மனத்திடம்தானே அமைதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகுகால துர்க்கா வழிபாடு



ஒரு விளக்கம்

இன்று பல கோயில்களில் பக்தர்கள் குறிப்பாக பெண்கள் கூட்டமாக சென்று செலுத்தும் பிரார்த்தனை அல்லது பரிகாரம்; ராகு காலத்தில் துர்க்கைக்கு எலுமிச்சம்பழ மாலை சாத்தி, தீபமேற்றி அர்ச்சனைகள் செய்து அம்பாளை வழிபடுவது ஆகும்.

ராகு காலத்தில் துர்க்காவை வழிபட்டால் கிடைக்கும் பலன்கள்.

திருமணத்தடை, புத்திரபாக்கிய தடை, குடும்பக் குழப்பம், தலை சம்பந்தமான நோய்கள் ஆகியவற்றிலிருந்து நிவாரணம் தருவாள்.

இவை யாவும் நன்றே. ஆனால் இப்படிச் செய்பவர்களில் பலரும் எலுமிச்சம்பழத்தைப் பிழிந்து அதன் மூடியில் தீபம் ஏற்றுகிறார்கள்; ஏன் என்று கேட்டால் எல்லோரும் செய்வதனால் நாங்களும் செய்கிறோம் என்று சொல்வதைத் தவிர வேறு பதில் இல்லை; இது பெரும் தவறாகும்.

எலுமிச்சம் பழத்துக்கு வடமொழியில் ''ஸ்தாபலம்'' என்று பெயருண்டு. அது பலம் பொருந்திய பூஜைக்குப் பயன்படும் பொருள்களில் ஒன்றாகும். அதைக் கெடுதல் செய்வதற்கும் பயன்படுத்தலாம்.

''ஆபிசாரம்'' செய்பவர்கள் எலுமிச்சம்பழத்தில் செய்ய வேண்டிய காரியங்களை எல்லாம் செய்துவிட்டு எரித்துவிடுவார்கள். எரித்த பின் அது எவர்களைக் குறித்து செய்யப்பட்டதோ அவர்களைச் சென்று தாக்கும். ஆனால் மந்திர ஸித்தி அடையாதவர்கள் சரியான வழிமுறைகள் தெரியாதவர்கள் அரைகுறை மந்திரம் தெரிந்தவர்கள் முதலானோர் இப்படிச் செய்யும் போது அது எரித்தவர்களையே தாக்கும்.

தோஷ பரிகாரத்திற்காக ஏதுமறியாத சாதராண ஜனங்கள் எலுமிச்சம்பழ மூடியில் விளக்கேற்றும்போது அது எரிந்து விடுமேயானால், முன்பு இருந்ததை விடவும் அந்த தோஷங்கள் இன்னும் அதிக வீரியத்தோடு தீபம் ஏற்றியவர்களைச் சென்றடையும். ஆதலால் எலுமிச்சிம்பழ மூடியில் தீபம் ஏற்றுவதைத் தவிர்த்து அகல் விளக்கில் தீபம் எற்றுவது நன்மை தரும்.

தகவல் பிரும்மஸ்ரீ த. சபாநாத சர்மா

ஆன்மீகம் அறிவுடன் இருப்பது அவசியம்.

## டிப்ஸ்

பீரோவில் வெள்ளி நகைகள் மற்றும் சாமான்களை வைக்கும்போது அதனுடன் ஒரு துண்டு கற்பூரம் அல்லது படிகாரத்தை போட்டு வைத்தால் கறுக்காது.

## டிப்ஸ்

காபி மேக்கரை கழுவும்போது நீருடன் சிறிது எலுமிச்சம் பழச்சாறு அல்லது வினிகரை விட்டு பின்பு ஸ்விட்சை ஆன் செய்தால் போதும் படுசுத்தமாகி விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்சை அரசன்
# இராஜபக்ச
## இரா. உமா



அண்மையில் (ஜுலை 21) இலங்கை சென்று திரும்பியுள்ளது இந்திய உயர்மட்டக்குழு. இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், வெளியுறவுச் செயலர் சிவசங்கர் மேனன், பாதுகாப்புச் செயலர் விஜய்சிங் உள்ளிட்ட இக்குழு இலங்கை அதிபரைச் சந்தித்துப் பேசியுள்ளது.

புகைப்படக்காரர்கள் கூட அனுமதிக்கப்படாத இச்சந்திப்பில் இந்திய பிரதமர் பங்கேற்கும் சார்க் மாநாட்டின் பாதுகாப்பு குறித்து ஆலோசனை செய்யப்பட்டதாக பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

ஆனால் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் மோதல் அதிகரித்து வரும் சூழலில், சீனாவும், பாகிஸ்தானும் இலங்கை அரசிற்கு ஆயுதங்கள் வழங்க முன்வந்துள்ள நிலையில் இச்சந்திப்பு நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும் ''இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வு காண்பதை இந்தியா விரும்பவில்லை என்ற வழக்கமான தீர்ப்பையும் இந்திய அதிகாரிகள் கூறிவிட்டுத் திரும்பியுள்ளனர்.

அனைவரின் ஆசையும் அதுதான் என்ற போதும் அதிபரின் பேராசை வேறாக அல்லவா இருக்கிறது.

இம்சை அரசன் 23ஆம் புலிகேசி என்றொரு திரைப்படம். அதில் எதிரிநாட்டு மன்னன் செய்தி அனுப்பிய புறாவினை, 23ஆம் புலிகேசி மன்னன் சுக்கா வறுவல் செய்து சாப்பிட்டுவிடுவான். புறாவின் காலில் கட்டப்பட்டிருந்த செய்தியையும் அறிந்து கொள்ளக்கூட முயற்சிக்க மாட்டான். ஆனால் அது போருக்கு முன்னால் அனுப்பப்படும் சமாதானத் தூது என்பதை எதிரி நாட்டு மன்னன் படை எடுத்து வந்து முற்றுகையிட்ட பிறகுதான் உணர்வான் 23ம் புலிகேசி.

பறக்க விடப்பட்ட சமாதானப்புறாக்களை எல்லாம் சுட்டு வீழ்த்தி சுக்கா வறுவல் செய்து சாப்பிட்டுவிட்டு, செரிமானத்திற்காக பேயாட்டம் போடும் இம்சை அரசன் ராஜபக்சே சமாதானம் என்றால் கிலோ என்னவிலை என்று கேட்கும் பரம்பரையில் வந்தவர். அவரிடம் அமைதித்தீர்வு பற்றிப் பேசுவது என்பது, முட்டுச்சந்தில் முட்டிக் கொள்வது போன்றது. இது தெரிந்திருந்தும் இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வுதான் வழி என்று இந்தியா உட்பட அனைவருமே சப்பைக் கட்டுக்கட்டுகிறார்கள்.

நாம் எடுக்க வேண்டிய ஆயுதம் எது என்பதை நம் எதிரிகளே தீர்மானிக்கிறார்கள் என்றார் மாவோ.

சுதந்திரத்திற்குப் பின்னர், 1972 வரை அதிகாரப் பகிர்வுடன் கூடிய கூட்டாட்சியையே தமிழர்கள் வலியுறுத்தி வந்தனர். சிங்கள இனவெறி அரசுகளின், தொடர்ந்த புறக்கணிப்புகளும் இன ஒழிப்பு நடவடிக்கைகளுமே தனி நாடு கோரத் தூண்டியது. 1976இல் தனிநாடு கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, தேர்தல் மூலம் இக்கோரிக்கைக்கு மக்களின் ஆதரவும் பெறப்பட்டது. தமிழர் நலனுக்கு எதிரானவர்கள் சித்தரிப்பது போல ஈழப் போராட்டமானது அம்மக்களின் மீது வலிந்து திணிக்கப்பட்ட ஒன்றல்ல. மாறாக அம்மக்களின் உணர்வுகளை ஜனநாயக முறைப்படித் தெரிந்து கொண்ட பிறகு, அவர்களின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டதுதான் ஈழப்போராட்டம்.

ஈழப்போராட்டத்தில் முதல் வடிவம் அகிம்சையில்தான் தொடங்கியது. காந்தி பிறந்த மண்ணை தந்தை நாடாகப் போற்றுபவர்களல்லவா? ஆனால், அந்த காந்தி தேசம்தான் அவர்களைக் கொல்ல ஆயுதங்களையும், பயிற்சிகளையும் கொடுக்கிறது என்பது வேறு. 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத்தமிழர் மாநாட்டில் சிங்கள இனவாதிகள் நடத்திய துப்பாக்கிச்சூடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலவரத்தில் 6 தமிழர்கள் கொல்லப்பட்டனர். இந்த இடத்தில்தான் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்திற்கான விதை ஊன்றப்பட்டது.

இலங்கையின் முதல் பிரதமர் சேனநாயகா முதல் இன்றைய அதிபர் ராஜபக்சே வரை தமிழின ஒழிப்பு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றனர். சர்வதேச சமூகத்தின் வற்புறுத்தலுக்காகப் போர் நிறுத்த உடன்படிக்கை, அமைதிப் பேச்சு வார்த்தை என்று அவ்வப்போது இலங்கை அரசு வேடிக்கை காட்டி வருகின்றது. இது நாடகத்தில் இடையிடையே வந்து போகும் கோமாளியைப் போன்றது. இராணுவத்தீர்வு என்ற நிலையினைக் கைவிடக்கூடிய எந்தவொரு சிறு அறிகுறியும் ராஜபக்சேவின், இலங்கை அரசின் நடவடிக்கைகளில் காணப்படவில்லை.

இது தெரிந்தும், இந்தியா, இலங்கைக்குத் தொடர்ந்து உதவி வருகின்றது. அன்னை இந்திராவின் காலம் வரை இலங்கை இனப்பிரச்சினையில், இந்தியாவின் நிலைப்பாடு சரியானதாக இருந்தது. அவருக்குப்பின், அதிகாரிகளின் தவறான ஆலோசனைகளால் எடுக்கப்பட்ட முடிவுகள் ஈழப்பிரச்சினையை இடியாப்பச் சிக்கலாக்கிவிட்டன.

இலங்கைக்கு ராணுவ உதவிகளை வழங்கு வதில், சீனா, ஜப்பான், பாகிஸ்தான் என எல்லாம் பின்னுக்குத் தள்ளப்பட்டு, ஈரான் இப்போது முதலிடத்தில் உள்ளது. இப்படி, ஆயுதக் குவியல் களின் மேல் ஆட்டம்போடும், ராஜபக்சேவிடம் போய், அமைதிப் பேச்சு வார்த்தை என்ற கெட்ட வார்த்தையை பேசலாமா?

சர்வதேச சமூகத்தின் எச்சரிக்கைக்கும், கண்டனங்களுக்கும் ஆளாகும்போது மட்டுமே இலங்கை அரசு சமாதானக் கொடியை வேண்டா வெறுப்பாக தூக்கிப்பிடிக்கும். ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிகளைப் பொறுத்தவரையில், சிறப்பாகச் செயல்பட்டதன் மூலம் போராளிகள் சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளனர்.

ஒரு தேசிய இனத்தின் அடையாளத்தைக் காப்பதற்காக நடத்தப்படும் போராட்டங்களுக்கு இந்தியா உட்பட உலகநாடுகள் ஆதரவளித்து வந்துள்ளன. அப்படி அண்மையில் தனிநாடான கொசாவோவை இந்தியாவும் அங்கீகரித்துள்ளது. தனிஈழத்தை எதிர்க்கிறது. தலாய்லாமாவை ஆதரிக்கும் இந்தியா, தமிழர்களின் உணர்வுகளை மதிக்க மறுக்கிறது. அதே நேரத்தில் எப்போதுமே இலங்கை இந்தியாவிற்கு விசுவாசமாக இருந்ததில்லை என்கிற வரலாற்று உண்மையினையும் ஒப்புக்கொள்ள மறுக்கிறது.

ஈழத்திற்கு எதிராக இந்தியாவை நிறுத்தி, இந்திய வரலாற்றில் கரும்புள்ளியை ஏற்படுத்த நினைக்கும் இலங்கை அரசின் வஞ்சகத்தை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை அரசைக் கட்டுப்படுத்துகின்ற வானளாவிய வளமையை இந்தியப் பேரரசுப் பெற்றிருந்தும், மௌன சாட்சியாய் நிற்பது மிகப்பெரிய வரலாற்றுத் தவறாகிவிடும்.

ஒரு இனத்தை அழிப்பதற்கான போராட்டமல்ல ஈழத்தமிழரின் போராட்டம். தங்கள் இனத்தைக் காப்பதற்கான போராட்டம். தமிழர்கள் என்றுமே மற்றவர்களை அடக்கி ஆள நினைத்ததில்லை. அடிமை வாழ்வை விரும்புவதுமில்லை. ●

## நம்பிக்கை மூலை

அமெரிக்காவின் புகழ்பெற்ற ஷாப்பிங் சென்டர் ஒன்றின் வாசலில் நூற்றுக்கணக்கானவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். பலத்த மழை பெய்து கொண்டிருந்தது. தங்கள் அலுவல் தாமதமாகிறதே என்ற எரிச்சல் நிறையப் பேருக்கு. கடிகாரம் பார்ப்பதும் மழையை சபிப்பதுமாய்...

அப்போது ஒரு சிறுமியின் குரல் கேட்டது. அம்மா! நாம் இந்த மழையில் நனைந்துகொண்டே ஓடிவிடுவோமா? தாய் பதில் சொன்னாள். வேண்டாம் மழை ஓயட்டும்!

சிறுமி கேட்டாள். அம்மா! காலையில் நீ என்ன சொன்னாய்? அப்பாவுக்கு வந்திருக்கும் புற்றுநோய் பற்றி பேசிக் கொண்டிருந்தோம். எதையும் கடந்து போகும் சக்தியைக் கடவுள் கொடுப்பார் என்றாயே! மழையைக் கடந்து போக முடியாதா! சூழ்ந்திருந்தவர்கள் அமைதியானார்கள்.

ஒரு நிமிடம் மவுனம் சாதித்துவிட்டுத் தாய் சொன்னாள்.

நீ சொல்வது சரிதான்! கடவுளின் சித்தம் அப்படியிருந்தால் நாம் மழையில் நனைவோமே! இருவரும் தட தடவென்று மழைக்கு நடுவே ஓடினார்கள்.

சில விநாடிகளில் பெருங்கூச்சல்! அதுவரை ஒதுங்கி நின்ற அனைவரும் குழந்தைகள் போல் உற்சாகக் குரலெழுப்பிக் கொண்டே மழையில் நனைந்தபடி தங்கள் கார்களை நோக்கி ஓடிக்கொண்டிருந்தார்கள்.

நம்பிக்கை நிறைந்த பிஞ்சுக் குரலொன்று எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்திவிட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சை வயல் கனவு

அரிவுவெட்டு ஆரம்பமாகிவிட்டது.

பச்சைநிற பயிரெல்லாம் மஞ்சள் நிறமாய் பரவியிருந்தது.

முற்றிப்பழுத்து சரிந்து கிடந்த நெல்மணி களைப் பார்க்க மனதுக்கு ஆனந்தமாய் இருந்தது.

அருகில் உள்ள வயல்காரர் எல்லோரும் வந்து கூட்டமாக அரிவி வெட்டினார்கள். பண்டா, அருநோசு, மரியக்கண்டு, செல்லத்துரை, ஆகியோருடன் அவரவர் கமங்களில் நிற்பவர்களு மாக மொத்தம் பன்னிரெண்டு பேர் வந்து வெட்டினார்கள்.

வேலாயுதம் ஒரு நிமிடம் ஓய்ந்து இருக்க வில்லை. சரசரவென்று மற்றவர்கள் கதிரை அறுத்து வைப்பதை சிவம் வியப்போடு பார்த்தான். அவர்களைப் பார்த்து தானும் கதிரை அறுத்து வைத்தான். பழக்கமில்லாத வேலை என்பதால் தொடர்ந்து செய்ய சிரமமாய் இருந்தது. குனிந்து நிமிர முதுகிலும் இடுப்பிலும் பிடித்துக் கொண்டது.

சிவம் தனது இயலாமையை காட்டிக் கொள்ளாமல் முடிந்த அளவு வேலை செய்தான். கதிர்கள் குவியல் குவியலாக அறுபட்டு வயல்பரப்பில் கிடந்தது.

இரண்டு நாட்கள் வெயிலில் காயவிட்டு சூடு வைத்தார்கள். மரியக்கண்டு கூடவே நின்று எல்லாம் செய்தான். அந்த வேலை நேரங்களில் தன்னைப் பற்றிய கதைகளையும் சொல்வான்.

''நம்ம ஊரில உழைக்க முடியாதுங்க. வானம் பார்த்த பூமி. ரெண்டு மூணு வருஷமா மழையே இல்லை. சீவியம் ரொம்ப கஷ்டமுங்க, நமக்குத் தெரிஞ்சவங்கதான் சிலோனுக்குப் போனா உழைக்கலாம்னு சொல்லி வந்து சேர்ந்தேங்க. உழைச்சு ஊருக்குக் காசு அனுப்பணும். பெஞ்சாதி புள்ளைங்க பாத்திக்கிட்டு இருக்குங்க. உங்க எல்லோரோட வயல்லயும் எனக்கு வேலை கிடைச்சா போதுங்க. உழைச்சிடுவேன்.''

மரியக்கண்டுவின் அப்பாவித்தனமான இயல்பு, வஞ்சகமற்ற உழைப்பு, விசுவாசமான தன்மை எல்லாமே சிவத்தை மிகவும் கவர்ந்தது.

## அத்தியாயம் 9

தாமரைச்செல்வி

அன்று சூடடிப்பதாய் தீர்மானித்தார்கள். மழை நன்றாய் விட்டுத் தந்திருந்தது. மதியம் தாண்டியதுமே ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினார்கள். வயலின் மேட்டுப் பகுதியின் நடுவில் களக்கட்டை நட்டுச் சுற்றி கதிர்ப்பாய்களை பரவி விரித்து வைத்தார்கள்.

நெற்கதிர்களைக் கொண்டு வந்து பாயில் குவித்தார்கள். பத்து மாடுகளை கயிற்றால் பிணைத்து மறுமுனையை கட்டையுடன் இணைத்துக் கட்டினார்கள்.

நீளக்கம்பு கொண்டு மாடுகளை கலைக்க அவை வட்டமாய் கதிர்களை மிதித்து நடந்தன. அந்த எல்லையில் நான்கு புறங்களிலும் பந்தங்கள் எரிந்து வெளிச்சத்தை தந்து கொண்டிருந்தது.

வட்டமாய் நடந்து கொண்டிருக்கும் மாடுகள் சாணம் போடும் போதெல்லாம் அவை கீழே கதிருக்குள் விழுந்து விடாமல் இருக்க வேலாயும் ஓடி ஓடி கடகத்தில் ஏந்தினான்.

மாடுகள் சுற்றிச்சுற்றி மிதிக்க வைக்கோலில் இருந்து நெல் மணிமணியாய் பிரிந்தது. வைக் கோலை உதறிப்பிரித்து அப்பால் போட்டார்கள். காற்று வளம் பார்த்து குல்லத்தால் நெல் தூற்றினார்கள். நெல்லை அள்ளி அள்ளிச் சாக்குகளில் போட்டு முடிச்சு முடிச்சாகக் கட்டினார்கள். அந்த நெற்குவியலுக்குள் கைவைத்து அளைந்தபோதும் அள்ளி அள்ளிக் கட்டியபோதும் எல்லையில்லா மகிழ்ச்சி ஏற்பட்டது. புது நெல்லின் வாசனை மூக்கை வந்து நெருடியது.

தொடர்ந்து நாலைந்து நாட்கள் வேலை நடந்தது. ''நினைச்சதை விட நல்லாய் பொலி அடிச்சிருக்கு''

பக்கத்தில் போடப்பட்டிருந்த கொட்டிலுக்குள் நெல் மூட்டைகளை அடுக்கினார்கள். நான்கு மாத உழைப்பும் அலைச்சலும் ஓய்வுக்கு வந்தது. அப்பாடா என்று மூச்சு விட்டார்கள்.

சுற்றுப்புற காணிகளின் அரிவுவெட்டு சூடடிப்பின்போதும் இவர்கள் போய் உதவி செய்தார்கள்.

சிறுபோக விதைப்பு தொடங்க முதல் நெல்லின் ஒரு பகுதியை விற்றுக் கொண்டு ஊருக்குப் போனார்கள்.

போகும்போது சாப்பாட்டுக்கும் நெல் மூட்டைகளை மாட்டு வண்டியில் ஏற்றிக் கொண்டு போனார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதுதான் வேலாயுதத்தின் கல்யாணப் பேச்சை அப்பு எடுத்தார்.

முதலில் தனக்கு இப்ப கல்யாணம் வேண்டாம் என்று வேலாயுதம் சொல்லிப் பார்த்தான். அப்புவும் ஆச்சியும் விடவில்லை. சிவம் அன்னத்திடம் ஓடிப்போய் ரகசியமாய் கேட்டான்.

''ஆரடி பொம்பிளை....''

''வேற ஆர் எங்கட கனகம் மச்சாள்தான்.''

'' அட பிறகு ஏன் அண்ணை வேண்டாம் எண்டு சொல்லுறார்.''

''அவர் மச்சாளை வேண்டாம் எண்டு சொல்லேலை. கலியாணம் இப்ப வேண்டாம் எண்டு தான் சொல்லுகிறார்.''

அவனுக்கு காரணம் புரிந்தது. தலைவாசல் திண்ணையில் அமர்ந்திருந்த அண்ணனை யோசனையுடன் பார்த்தான்.

கனகம் மச்சாள் அப்புவின் தங்கச்சியின் மகள். அவளை மருமகளாக கொண்டு வரத்தான் அப்பு ஆச்சிக்கு விருப்பம் இருந்தது. அவனுக்கும் கனகம் மச்சாளை பிடிக்கும். அண்ணையின் சுறுசுறுப்புக்கு பொருத்தமானவள் தான்.

அவன் வேலாயுதத்தின் பக்கத்தில் போய் அமர்ந்தான். வேலாயுதம் திரும்பி அவனைப் பார்த்தான்.

''ஏன் அண்ணை அப்படிச் சொன்னனி''

''இப்ப கலியாணம் வேண்டாம் கொஞ்சம் பொறுத்துச் செய்வம் எண்டு தான் சொன்னனான்''

''அது தான் ஏன்''

இப்ப கலியாணம் செய்து அங்க கூட்டிப் போய் இருக்க முடியாது. எனக்கெண்டு ஒரு காணி வேணும். ஒரு சின்ன கல்வீடு கட்ட வேணும். கனகத்தை கூட்டிக் கொண்டு போய் இருக்கிறதெண்டால் சில வசதியள் வேணும். அந்தக் கொட்டிலுக்க இருக்க ஏலுமே. அதுதான்.''

''சரி அண்ணை காணி கிடைச்சி வீடு கட்டின பிறகு கூட்டிப் போகலாம் தானே. இப்ப கலியாதனத்தைச் செய்யன். அங்க போறவரைக்கும் மச்சாள் இங்க இருக்கட்டும். நீ வந்து பார்த்துச் செல்லலாம் தானே.''

அதெல்லாம் கரைச்சல். வயலை விட்டிட்டு இங்க அடிக்கடி வரஏலாது.

''அதெல்லாம் வரலாம். நான் அங்க இருந்து பார்த்துக் கொள்ளுவன்தானே. நீ ஒண்டுக்கும் யோசிக்காதே அண்ணை. கலியாணத்தைச் செய்.''

ஒரு வழியாய் வேலாயுதத்தைச் சம்மதிக்க வைத்தான். அடுத்த புதன்கிழமை கனகம் வீட்டிற்கு சோறு குடுப்பித்து கலியாணம் நடந்து முடிந்தது. வேலாயுதத்தின் கலியாண நிகழ்வோடு இருவரும் சேட்டு அணியத் தொடங்கினார்கள்.

''நீ கொஞ்ச நாளைக்கு நிண்டிட்டு வா. நான் முதல்ல போறன்.''

சிவம் வண்டிலில் பரந்தனுக்கு வந்து விட்டான். ஏதோ எல்லாப் பொறுப்பையும் தானே ஏற்றுக் கொண்டது போல் உணர்ந்தான்.

மரியக்கண்டுவுடன் சேர்ந்து வரம்பு செதுக்கிக் கொண்டிருந்த ஒரு காலைப் பொழுதில் கார்த்திகேசு வந்தான். சிறிது நேரம் நின்று அவர்களுடன் கதைத்துக் கொண்டிருந்தான். அப்போதுதான் மரியக்கண்டு சொன்னான்.

''வர்ற பங்குனித் திங்களுக்கு பொறிக்கடலை அம்மன் கோயிலுக்கு போகலாமுங்க. பொங்கல்



பூசையோட விடிய விடிய கூத்தும் நடக்கும். போன வருஷம் கணேசபுரத்தில் இருந்து வண்டி கட்டிக்கிட்டு போயிருந்தோம்.

''போய்ப்பார்க்கலாம் தான். என்ன சிவம் போவமா.''

''அதுக்கென்ன எப்ப எண்டு தெரிஞ்சா எங்கட வண்டியிலேயே போயிட்டு வரலாம்.''

''எந்தத்திங்கள் பூசை பொங்கல் கூத்து நடக்கும் எண்டு விசாரிச்சு வையுங்கோ. போவம். அப்ப நான் போட்டு வரட்டே. அங்க வரம்பு செதுக்க ஆட்களை விட்டுட்டு வந்தனான்.''

ஒரு வாரத்தின் பின்பு வேலாயுதம் வந்துவிட்டான்.

''என்னண்ணை அதுக்குள்ள வந்திட்டாய்.''

இங்க இவ்வளவு வேலை கிடக்கு. அங்க நிக்க ஏலுமே. வரம்பு செதுக்க வேணும். விதைப்புக்கு ஆயத்தம் செய்ய வேணும்.''


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏன் இதெல்லாம் நான் பாக்க மாட்டேனே.''

சிவத்துக்கு குரல் இறங்கிப் போயிற்று. இதெல்லாம் நான் பாத்து வைப்பன் தானே. நீ விதைக்கிற நேரம் வந்திருக்கலாம்.''

''இங்க உள்ள வேலையளை நினைச்சா அங்க நிற்க மனம் வருமே. பாப்பம் விதைப்பு முடிஞ்சாப்பிறகு ஒருக்காப் போய் வருவம்.''

இந்த சிறு போக விதைப்புக்கு ஊரிலிருந்து ஆட்களை கொண்டுவரவில்லை. மரியக்கண்டு போல வந்து நின்ற பலரும் ஒன்று சேர்ந்து வயல் வேலைகளுக்கு வந்தார்கள்.

''வாற திங்கள் பொறிக்கடலை அம்மன் கோயில் பொங்கலாம். போட்டு வரப்போறம் அண்ணை.''

வேலாயுதத்திடமும் கேட்டு வைத்துக் கொண்டான். இங்க வந்ததிலிருந்து சிவம் அதிகமாய் எங்கும் போனதில்லை. மனிதர்களையும் இடங்களையும் பார்க்கும் ஆவல் அவனிடம் இருந்தது. இப்போது கோயிலுக்குப் போவதில் பெரும் உற்சாகம் ஏற்பட்டது.

பொங்கல் அன்று காலையில் கார்த்திகேசு வீட்டுக்கு வந்துவிட்டான்.

''நீயும் கோயிலுக்கு வாவன் அண்ணை.''

சிவம் கேட்டுப் பார்த்தான்.

உங்களுக்குத்தான் பார்க்கிற வயது. போய் பாருங்கோ. எனக்கு இங்க எவ்வளவு வேலையள் இருக்கு.

வேலாயுதம் வர மறுத்தது மனதுக்கு குறையாய் இருந்தது.

எந்த நேரமும் இவருக்கு வேலைதான்...

வண்டிலில் சிவத்துடன் கார்த்திகேசு, மரியக்கண்டு, செல்லத்துரை எல்லோரும் ஏறிக் கொண்டார்கள். மாடுகள் பூநகரி வீதியில் ஏறி மேற்காக நடக்கத் தொடங்கின. தெருவின் திருப்பத்தில் உள்ள பாலம் கடந்து போனார்கள்.

''அங்க சந்தியில நிண்டு பியோன் ஏரம்பு கை காட்டிறான். கோயிலுக்கு வாறான் போல. நிண்டு ஏத்திக் கொண்டு போவம்.''

செல்லத்துரை சொன்னதும் சந்தியில் வண்டிலை நிறுத்தி ஏரம்புவையும் ஏற்றிக் கொண்டு போனர்கள்.

பாதையின் இருபக்கமும் மரங்களும், பற்றைகளுமாகவே இருந்தது. சிறிது தூரம் வரை எந்த மனிதர்களையும் காண முடியவில்லை. ஓவசியர் சந்தி கடந்து குஞ்சுப்பரந்தனை நெருங்கினார்கள்.

இப்போது தூரத்தூர குடிசைகளும் வயல்வெளிகளும் தென்பட்டன. மனிதர்களின் நடமாட்டமும் இருந்தது. பெண்கள் இடுப்பில் குடத்துடன் நடந்து கொண்டிருந்தார்கள். பரந்த வெளியில் பனை மரங்கள் சிறுசிறு கூடலாக நின்றிருந்தன. காலை வெய்யில் பட்ட காற்று இதமாக வந்து முகத்தில் மோதியது.

மரியக்கண்டு பாதை சொல்லிக்கொண்டு வந்தான்.

''நா இங்க நாலைஞ்சு தடவை வந்திருக்கேன். காட்டில வேட்டைக்குப் போறவங்க இங்க இருக்காங்க மாரின்னு ஒருத்தனை நல்லாத் தெரியும். அவன்கிட்ட மான் மரை பண்டின்னு இறைச்சி எடுக்க வந்திருக்கேன். அந்தா அந்த ஒற்றையடிப் பாதைக்கப்பால தான் மாரியோட வீடு. நல்ல காட்டுத் தேனும் அவன் கிட்ட எடுக்கலாம்.''

சிவத்துக்கும் காட்டு வேட்டைக்குப் போகும் ஆசை எழுந்தது. ஆனால் அண்ணன் என்ன சொல்வானோ என்ற தயக்கம்.

ஒரு தடவை அந்த மாரியை பார்க்கவேண்டும்.

''எதிரே வர்ற இடது புற வீதியில திரும்புங்க''

வண்டில் திரும்பியது.



மண்சாலை சிவப்பு நிறமாய் புழுதி பறக்க நீண்டிருந்தது.

ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாய் நடந்துபோய்க் கொண்டிருந்தார்கள்.

''இது தான் கோயில். எதிர்ப்புறம் இருக்கிற வயல்வெளியில் வண்டிலை நிறுத்தியிட்டு வாங்க.''

சிவமும் கார்த்திகேசுவும ஆர்வமாய்ப் பார்த்தார்கள்.

பரந்த இடம். சிறுசிறு மரங்கள் நடுவே கொட்டிலுக்குள் அம்மன்.

சுற்றிலும் நிறைய ஆட்கள். சாம்பிராணி, கற்பூர வாசனை. அன்று அந்த அம்மன் கோயிலில்தான் அவர்கள் விநாசியைச் சந்தித்தார்கள்.

தொடரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு கப்பித்தாவத்தை ஸ்ரீ கருணை கடாட்சாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாதர் தேவஸ்தானம் 1793ஆம் ஆண்டு திருவிளங்கு நகரத்தார் என்று அழைக்கப்படும் வணிக வைசியச் செட்டிமாரால் ஸ்தாபிக்கப்பட்டது. கொழும்பு மாநகரில் முதல் முதற் கட்டப்பட்ட சிவன் ஆலயம் இதுவேயாகும். இதன் ஆரம்ப காலத்தில் இத்திருத்தலத்தை தீவுக்கோவில் என்றே அழைத்தார்கள். காரணம் நான்கு பக்கமும் கடல் நீரால் சூழப்பட்டுத் திட்டு நிலத்திலேயே (சிறிய தீவு) இக்கோயில் அமைந்திருந்தது. ஒல்லாந்தரின் இறுதிக் காலத்தில் தென் இந்தியாவிலிருந்து வந்த வைசியர்களும் ஒல்லாந்தையரைப் போல் வர்த்தகத்தில் ஈடுபட்டனர். உள்நாட்டு விளைப்பொருட்களாகிய கறுவா, கிராம்பு, ஏலம், மிளகு, சாதிக்காய், சாதிப்பூ போன்ற வாசனைத் திரவியங்களும் தேங்காய், கொப்பறா, எண்ணை, தும்பு, கயிறு முதலியவைகளும் பாதைகள் மூலம் புத்தளம், சிலாபம், நீர்க்கொழும்பு முதலிய இடங்களிலிருந்து விற்பனைக்காக கப்பித்தாவத்தைக்கே வந்து சேரும். இவற்றை வைசியர்கள் கொள்வனவு செய்து திருவனந்தபுரம், நாகபட்டினம், காரைக்கால், கோவா போன்ற இடங்களுக்கு ஏற்றுமதி செய்து வந்தனர். இச்சிறு தீவில் தங்கியிருந்து வியாபாரம் செய்த வைசியச் செட்டிமார்கள், ஒரு மரத்தடியில் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தனர். இத்தீவுக் கோவிலுக்குச் செல்வதற்கு தற்சமயம் மன்னிங் மாக்கற் என்று அழைக்கப்படும் இடத்திலிருந்து கட்டுமரத்தில் ஒரு வெள்ளிச் சல்லி (அரைச் சதம்) கட்டணமாகக் கொடுத்துச் சென்று வந்தனர். அக்காலகட்டத்தில் இலங்கையில் புகையிரத சேவை ஆரம்பிக்கப்படவில்லை. ஆங்கிலேயர் காலத்தில் கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையம் கப்பித்தாவத்தை ஆலயத்தின் வடகிழக்கு எல்லையோரத்திற் கட்டப்பட்டது.

ஒல்லாந்தரால் கப்ரின்ஸ் கார்டன் (Captain's Garden) என்று அழைக்கப்பட்டு வந்த இந்த இடம் சுதேசிகளால் கப்பித்தான்வத்தையென அழைக்கப்பட்டு அப்பெயர் பின் மருவி கப்பித்தாவத்தை என விளங்குகின்றது.

ஸ்ரீகைலாச நாத சுவாமிகள் ஆலயத்திற்கு மருதானையிலிருந்து டார்லி வீதி (Darley Road) வழியாகவும், மக்கலம் வீதியுடாகவும் சென்றடையலாம். மூலமூர்த்தி சிவலிங்கப்பெருமான் மூன்று அடி உயரத் திருவுருவம் நான்கு அடி உயரமான ஸ்ரீ கருணாகடாட்சி அம்பாள் தென்முகமாக எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கிறார்கள். மகர மண்டபத்தில் செம்பிலான அழகிய நடராஜப் பெருமாள், சிவகாமியம்மை, 63 நாயன்மார்கள், ஆகியோரின் திருவுருவங்கள் அமைந்துள்ளன. துவாஸ்த்தம்ப மண்டபத்தின் மேற்பகுதியில் மீனாட்சி சுந்தரேசர் கல்யாணம், திருக்காளத்தியில் வேடன் கண்ணப்பன் தன் கண்ணைப் பிடுங்கி அப்பும் காட்சி, கைலையில் மாம்பழத்திற்காக முருகன் பிள்ளையார் உலகவலம் வரும் போட்டி, தாருகாவனத்தில் சிவன், விஷ்ணு முறையே பிச்சாடனர், மோகினி வேடம், கேதாரத்தில் கௌரியின் சிவபூசை, ஆறுமுகனின் சரவணப் பொய்கை அவதாரம், சிவனுக்கு சுவாமிநாதன் உபதேசம், கைலையில் சிவன் பார்வதி நடனம், இராமேஸ்வரத்தில் இராமர் இலிங்க வழிபாடு, மேலும் ஔவையார், கம்பர், நக்கீரர், விவேகானந்தர், பட்டினத்தார், அகத்தியர், திருவள்ளுவர், காரைக்காலம்மையார், போன்றோரின் கதையிலான திருவுருவங்கள் பலநிற வர்ணங்களில் அழகாகக் காட்சியளிக்கின்றன. மூலஸ்தானக் கோஷ்டத்தில் நர்த்தன கணபதி, தட்க்ஷணா மூர்த்தி, இலிங்கோற்பவர், துர்க்கை அம்பாள், பிரம்மா போன்றோரும் பரிவார மூர்த்திகளாக சௌபாக்கிய கணபதி, சோமாஸ்கந்த மூர்த்தி (செம்பு), மகாவிஷ்ணு, காசிவிஸ்வநாதர் விசாலாட்சி, வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர், சனீஸ்வரர்,



# ஸ்ரீ கைலாசநாதர் சுவாமி ஆலயம்

கப்பித்தாவத்தை – மருதானை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டேஸ்வரர், கமலதீர்த்தத்தடாகம், நவக்கிரக நாயகர்கள், வசந்த மண்டப எழுந்தருளிகள், பைரவர், சந்திரர், சூரியர் ஆகியவை தனித்தனி சந்நிதிகளில் அமைந்துள்ளன.

கிழக்கு வாசலில் அழகிய பலவர்ணச் சிற்பங்கள் நிறைந்த ஏழு நிலைகள் கொண்ட கோபுரமும், வடக்கு வாசலில் மூன்று நிலைகள் கொண்ட கோபுரமும், ஸ்தூல லிங்கங்களாகக் காட்சியளிக்கின்றன. கல்யாண மண்டபமும் சிவாச்சாரியார், ஊழியர் தங்கும் விடுதிகளும், வடக்குப் புறவெளி வீதியில் தென்படுகின்றன. வெளிவீதி வடகிழக்கு மூலையில் சிற்பத் தேர் அமைப்பிலான அழகிய கோவிலில் நான்கு அடி உயரம் கொண்ட செம்பிலான அழகும் எழிலும் நிறைந்த கண்ணகி அம்பாள் சாந்த சொரூபியாக கையிற் சிலம்பு இல்லாமல் இரு திருப்பாதங்களிலும் மாணிக்கச் சிலம்புகள் அணிந்து அபய வரதகரம் காட்டிய நிலையில் அருட் காட்சி அளிக்கின்றார். இதன் உற்சவ மூர்த்தியும் அதே வடிவில் அமைந்துள்ளது. இத்திருவுருவத்தின் பின் சுவரில் கற்புக்கரசி கண்ணகி மதுரைப் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் முன்னால் வலது கையிற் சிலம்பேந்தி தலைவிரி கோலத்தில் கோபாவேசத்துடனும், சோகத்துடனும், வழக்குரைக்கும் காட்சி காண்போர் மனத்தை, நெகிழ வைக்கும். கண்ணகி அம்பாளுக்கு பிரதி திங்கட்கிழமை தோறும் விஷேட பூஜைகளும், பொங்கலும் நடைபெற்று வருகின்றன. நவக்கிரக நாயகர்களின் வடதிசையில் அமைந்துள்ள மூன்று முகங்களும் ஆறுதிருக்கரங்களுமுடைய ஸ்ரீ தத்தாத்ரேயர் செப்புத் திருவுருவம் இலங்கையில் வேறு எந்த ஆலயத்திலும் இல்லாத ஒன்றாகும். சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகிய மும்மூர்த்திகளும் ஒன்றிணைந்த அருட் சொரூபம் பதிபக்தியில் முத்தேவியர்களிலும் மேம்பட்டு விளங்கிய அத்திரி மகரிஷியின் தர்மபத்தினி அனுசூயாவால் வழிபட்டு வந்த தெய்வமாகும். கன்னியாகுமரி அருகிலுள்ள சுசீந்திர ஆலயத்தில் தாணுமால் அயன் மூலவர் சிவலிங்கத்திருவுடையவர்.

நவக்கிரக நாயகர் சந்நிதி விமானத்தில் சூரிய தேவன் ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் பவனி செல்லும் காட்சியமைந்த கதையாலான பிரமாண்டமான சிற்பம் மிகவும் கலை அம்சத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பெரிய ஆனைக்குட்டிச் சித்தர் தம் இறுதிக் காலத்தில் இத்திருத்தலத்திலேயே இருந்து ஏழைகளின் பசிப்பிணியையும், நோய் நொடிகளையும் போக்கி பல அற்புதங்களைப் புரிந்து முக்தியடைந்தார். சேர்.பொன்.இராமநாதன், அருணாசலம் ஆகிய இரு சகோதரர்களும் அவரின் நன்மதிப்பைப் பெற்றவர்கள்.

ஸ்ரீகைலாச நாதர் ஆலயத்தில் தினமும் ஆறுகாலப் பூசைகளும், சகல நைமித்திய பூஜைகளும், விழாக்களும், விரதங்களும், சடங்குகளும் நடைபெற்று வருகின்றன. வருடாந்த மகோற்சவம் ஸ்ரீகைலாச நாதருக்கு 15 நாட்கள் நடைபெறும். ஆவணி உத்திரட்டாதி அன்று தீர்த்தத்துடன் விழா நிறைவு பெறும். தேர்த்திருவிழா வன்று வீரசக்தி, சோமஸ்கந்தமூர்த்தி, சண்டேஸ்வரர் ஆகிய மூவரும் தமக்குரிய அழகிய சிற்பத் தேர்களில் ஆரோகணித்து வீதி வலம் வரும் நிகழ்ச்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

ஸ்ரீ கருணாகடாட்சாம்பிகைக்கு பத்து நாட்கள் திருவிழா வைகாசி மிருகசீரிடத்தன்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறும்.

பெரிய ஆனைக்குட்டி, சின்ன ஆனைக்குட்டி போன்ற சித்தர்களின், மகான்களின் காலடி பட்ட திவ்விய திருத்தலமாதலால் இங்கு எப்பொழுதும் அருளொளி வீசிக் கொண்டே இருக்கின்றது. இது இலங்கையின் அரசியல் தலைவர்களாலும், ஏனையோராலும் இன மத வேறுபாடின்றி வழிபட்டு வருகின்ற புராதன சிவத்தலமாகும். இத்திருத்தல்தை திருவிழங்க நகரத்தார் அறங்காவலர் நிர்வாக சபையினர் பல கஷ்டங்களின் மத்தியிலும் திறம்பட நிர்வகித்து வருவது போற்றுதலுக்குரியது. அடுத்த மகா கும்பாபிஷேகம் மிக விரைவில் இங்கு நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**இடைக்காடு**

**கயிலைமணி. வேல். சுவாமிநாதன்**

## டிப்ஸ்

அழகு துணியில் எண்ணெய்க் கறை பட்டுவிட்டதா? எதையும் தேடி பதற்றப்படாதீர்கள். அதையுடன் பூஜையறைக்குச் செல்லுங்கள். அங்குள்ள விபூதியை எடுத்து, எண்ணெய் கொட்டிவிட்ட பகுதியில் பூசி, ஒரு மணி நேரம் பொறுத்திருங்கள். பின்னர், வழக்கமான துணி சோப்பு போட்டு அலச... கறை காணாமல் போய்விடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுமதி
## கவிதைகளில்
## தமிழ் - தமிழினம்
## முனைவர்
## தா.க. அனுராதா

இன்றைய இலக்கிய உலகில் எத்தனையோ இலக்கியங்கள் புதிது புதிதாக தோன்றுகின்றன. அவ்வகையில் இலக்கண உத்திகளைக் கொண்ட மரபுக் கவிதைகளை உடைத்தெறிந்து பாமரரும் புரிந்து கொள்ளும் வகையில் உருவானது புதுக் கவிதை. இப்புதுக்கவிதை உலகில் எண்ணற்றோர் தோன்றி வலம் வந்தாலும் அவர்களில் குறிப்பிடத் தக்கவர் அறிவுமதி. திரையிசைப் பாடல்கள் மட்டுமின்றி கவிதை தளத்திலும் தம் தடத்தைப் பதிவு செய்துள்ளார்.

தமிழால் வாழ்ந்தார் பலர். தமிழுக்கென வாழ்ந்தார் சிலர். பிறமொழிக் கலப்பில்லாமல் தமிழைத் தம் உயிராகவும் உணர்வாகவும் போற்றியவர் மிகச்சிலர். அந்தச் சிலரைப் போன்ற அறிவுமதியும் தமிழ் மொழியில் மட்டும் தனது கவிதைகளை எழுதியுள்ளார். இயன்றவரை தமிழிலேயே பேச வேண்டும் எழுத வேண்டும் பாட வேண்டும் என்ற எண்ணம் உடையவர்.

*தாய்மொழி பேசா வாயும்*
*தாய்மொழி பயிலா நாவும்*
*தாய்மொழி கேளாக் காதும்*

இருத்தல் கூடாது என்ற கோட்பாடு அறிவுமதியிடம் இருந்தது. பெரியார் கொள்கையில் பற்றுக் கொண்ட இவர் தமிழுக்காகவும் தமிழர்களுக்காகவும் தம் எண்ணத்தையும் எழுத்தையும் உரித்தாக்கியுள்ளார் என்பதனை அறிவுமதி கவிதைகளில் தமிழ் தமிழினம் என்ற தலைப்பின் வழி அறியலாம்.

### இலக்கண வளம்

எந்த ஒரு மனிதனும் அவனது தாய்நாட்டின்மீதும் தாய்மொழியின் மீதும் பற்றுக் கொண்டவனாக இருக்கவேண்டியது அவசியம். அவ்வகையில் அறிவுமதி தமிழ் எழுத்துக்களைப் பற்றி தன்னுடைய கவிதையில் குறிப்பிட்டுள்ளார்.

அந்நியர்களிடம் இருந்து விடுதலை பெற்ற நம்நாடு சமுதாய விடுதலை என்ற நிலையை எட்ட எத்தனித்து நின்றது. எத்தனை எத்தனைத் தேசியத்தலைவர்கள் தோன்றி வந்து எழுச்சி முரசு கொட்டினாலும் இன்னும் நம் சமுதாயப் பேருறக்கம் நீங்கியதாக எண்ண முடியவில்லை. இந்நிலையில் மக்கள் அரைவயிற்றுக் கஞ்சிக்கு ஆளாய்ப் பறக்கும் அவலநிலை நீங்கவில்லை.

உழைக்கும் உழைப்பாளிகளைத் தெய்வம் போல் போற்ற வேண்டும். உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்காமல் உழைப்பை மட்டும் சுரண்டுவதால் அவர்கள் வறுமையில் வாடித் துன்புறுகின்றனர். அவர்கள் எழுச்சியுள்ள மனிதர்களாக மதிக்கப்படாமல் வேலை செய்யும் இயந்திரங் களாகவே பயன்படுத்தப்படுகிறார்கள். எதிர்த்து ஏழைகள் தங்கள் கைகளில் ஆயுதத்தை ஏந்துகின்றனர். இதனை

ஆம்
*உலகத்தழுவிய*
*உயிர் எழுத்துக்களுக்காக*
*மெய்யெழுத்துக்களைப் பற்றிக்*
*கவலைப்படாத நாங்கள்*
*ஆயுத எழுத்துக்கள்* (அறி.கவி.ப.71)

என்று வறுமையை இப்பாடலில் படம் பிடிக்கிறார்.

சுவர்களில் எழுதப்படும் விளம்பர வாசகங்களிலும் சுவரொட்டிகளிலும் எழுதப்படும் வாசகங்களிலும் எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன. இந்தப் பிழைகளால் தமிழ் இலக்கண அமைப்புகளான சீர், தளை, அடி, தொடை ஆகியன எல்லாம் கெட்டு மண்டியிடுகின்றன என்கிறார். இதனை

*எழுத்துப் பிழைகளோடு*
*சுவர்களில்*
*எழுதப்படுகிற*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*புரட்சி வாசகங்களுக்கு*
*முன்னால்*
*நமது*
*சீர்*
*தளை*
*அடி*
*தொடை எல்லாமே*
*மண்டியிடுகின்றன* (அறி.கவி.ப.59)
என்று வருத்தத்துடன் கூறுகிறார்.

## இலக்கிய வளம்

எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றான புறநானூற்றில் ஔவையார் தூது செல்லும் காட்சியைத் தம் கவிதையில் கட்டியுள்ளார். அதியமானிடமிருந்து வந்த ஔவையாருக்குத் தொண்டைமான் தன்படைக்கருவிகளைக் காட்டுகிறான். அவை மயிற்பீலி அணிந்து மாலை சூட்டி திரண்ட காம்புகள் திருத்தி நெய்பூசி அழகாகக் காட்சி தந்தன. ஆனால் என் தலைவன் அதியமானின் ஆயுதங்கள் பால் பகைவரைக் குத்துதலால் கங்கும் நுனியும் முறிந்து செப்பனிடக் கொல்லனது சிறிய கொட்டிலை அடைந்திருக்கின்றன என்ற கருத்தைத் தம் கவிதையில் அறிவுமதி எடுத்தாண்டுள்ளார். இக்காட்சியை

*ஔவைக் கிழவியின்*
*ஏளனத்திற்கு*
*ஆளான*
*தொண்டைமானின்*
*ஆயுதங்களாய்க்*
*காட்சிப்படுகிற*
*உனது வேல்கள்*
*அதியமானின்*
*ஆயுதங்களாய்*
*அவதாரமெடுக்கத்*
*தாகம் வளர்க்கின்றன* (அறி.கவி.ப.55)

என்று தொண்டைமானைப் புகழ்வது போலப் பழித்தும் அதியமானைப் பழிப்பது போலப் புகழ்ந்தும் கூறியுள்ளார். இச்செய்தியைக் கொண்டு இன்று நாட்டில் எங்குப் பார்த்தாலும் வன்முறை தலைவிரித்தாடுகிறது. அதை முருகனிடம் கூறி உன் வேல்கள் தொண்டைமானின் படைக்கருவியால் அல்லாது அதியமானின் ஆயுதமாய் மாறவேண்டும் என்று உரைக்கிறார்.



தமிழ் இலக்கியங்களில் ஒன்றான பக்தி இலக்கியத்திலுள்ள திருப்பாவை திருவெம்பாவை பற்றித் தம் கவிதையில் கோடிட்டுக் காட்டுகிறார். காதலன் தன் காதலியை வருணிக்கையில் என்னுடைய வீதியில் மார்கழி மாதத்தில் மட்டுமே திருப்பாவையிலும் திருவெம்பாவையிலும் பள்ளி யெழுச்சி நடைபெறுகிறது. ஆனால் பாவையே நீ எல்லா மாதங்களிலும் அல்லவா பள்ளியெழுச்சி யாகிறாய் என்று தமிழ் இலக்கியப் பக்தி நூல்களைப் பற்றிக் கூறுகிறார். இதனை

*அடி*
*மார்கழி வீதியில்*
*மட்டுமே*
*திருப்பாவை*
*திருவெம்பாவை*
*பள்ளியெழுச்சியாகிறது*
*எனது வீதியில்*
*பாவையே நீ*
*எல்லா மாதங்களிலுமல்லவா*
*பளளியெழுச்சி செய்கிறாய்* (அறி.கவி.ப.28)

என்று காதலி வருணனையில் பக்தி இலக்கியங்களைச் சுட்டுகிறார் அறிவுமதி.

## காதல்

காதல் புனிதமானது. காதலில் ஆணும் பெண்ணும் அன்றில் பறவைகள் போல் வாழ்தல் இயற்கையாகும். காதலுக்குச் சாதி மத பேதமில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்விலே இன்பம் அளிப்பது காதல்; வாழ்வை வளமாக்குவது காதல்; உலகத்தைப் பாலூட்டி வளர்ப்பதும் காதல். காதல் மதுவை விட நினைக்குந்தோறும் மகிழ்வைத் தருவதென்றும் எண்ணும் போதெல்லாம் இன்பம் தரக்கூடியதென்றும் வள்ளுவர் கூறுவார். பாரதியாரோ காதல் இல்லாவிடில் இவ்வுலகமே இல்லை என்கிறார்.

*காதல் காதல் காதல்*
*காதல் போயின்*
*சாதல் சாதல் சாதல்*

என்ற பாடல் வரிகளின் மூலம் அவர் காதலுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளதைக் காணலாம். அதன்வழி அறிவுமதியும் மகாபாரத கதாபாத்திரங்களோடு காதலை ஒப்பிட்டு எழுதியுள்ளார்.

சமுதாயத்தில் உள்ள அனைவரும் காதலை வரவேற்கின்றனர். ஆனால் காதலர்களை எவரும் வரவேற்பதில்லை. காதலைக் காவியச் சட்டமிட்டுச் சரித்திரக்கவசம் மாட்டுவதைப் போல தங்களது காதலும் ஆகிவிடக்கூடாது என்ற தவிப்பு காதலனுக்கு உள்ளது. இதனை படம் மாட்டி

*கண்ணன் இராதையை*
*வணங்கத் தெரிகிறது*
*நம்மைக்*
*கண்ணன் இராதையாக்கிய*
*காதலுக்கு வாழ்த்துக்கூறத் தெரியலையே*
(அறி.கவி.ப.29)

என்ற வரிகள் காதலை ஏற்க மறுக்கின்ற சகத்திற்கும் பெற்றவர்களுக்கும் கூறுவதாக எழுதியுள்ளார். அறிவுமதி தமிழ் பயின்ற மாணவர் என்பதை நிலை நாட்டுகிறார்.

## பாரதியைப் போற்றும் பாங்கு

மின்னலாய்த் தோன்றி இடியாய் முழங்கி கவிதை மழை பொழிந்தவர் மகாகவி பாரதி. தமிழ் நாட்டின் மீது தீராப் பற்றுடையவர். தம் மூச்சும் பேச்சும் வாழ்க்கையும் தமிழுக்கு என்று அர்ப்பணித்தவர். பாரதியைப் பற்றிப் பேசாத கவிஞர்கள் எவருமில்லை. அறிவுமதி தம் கவிதைகளில் தமிழினைப் போற்றிப் புகழ்ந்த பாரதியிடம் காக்கைகள் பேசுவது போல் அமைத்துள்ளார். காக்கைக் குருவி எங்கள் சாதி என்று எங்களை உன்னுடைய சாதியில் சேர்த்து எங்கள் பசிக்கு உணவாக அரிசிகளை அள்ளிப் போட்டாய். எனவேதான் உன் மனித சாதியே உன்னைப் பட்டினிப் போட்டுக் கொன்றது என்று பாரதியின் சாவுக்குத் தங்கள் காக்கையினங்கள்தான் காரணம் என்று காக்கைகள் வருத்தப்பட்டு கூறுவதை

*காக்கை*
*குருவி*
*எங்கள் ஜாதி*
*என்று*
*கர்ஜித்த*
*கவிச்சிங்கம்*
*நீதானே*
*பாரதி*
எங்களின்
*சாதிகளுக்கு*
*அரிசிகளையும்*
*அள்ளிப் பாட்டாய் விடுகிறாய்*
*என்றுதான் பாரதி*
*உனது சாதியே*
*உன்னைப்*
*பைத்தியமென்று*
*பட்டினிப் போட்டுக்*
*கொன்றது* (அறி.கவி.ப.72)
என்று அமைத்துள்ளார்

## முடிவுரை

வரலாற்றுப் பெருமையும் வளமையும் கொண்ட தமிழ்மொழியும் தமிழனும் மண்ணில் எல்லா நிலையிலும் செல்வாக்குடன் விளங்க வேண்டும் என்று எண்ணி மக்களுக்குத் தன் கவிதையின் மூலம் விழிப்புணர்வூட்டுகிறார். அன்றைய மொழி ஆதிக்கச் சக்திகள் தமிழைச் சகத்தின் மையத்திலிருந்து விளிம்பிற்குத் தள்ளுகிற முயற்சியில் ஈடுபடும்போது மொழி உணர்வுள்ள படைப்பாளன் தம் மொழியை விளிம்பிலிருந்து மையத்திற்குக் கொணடு வரவே பாடுபடுவான்

அவ்வழியில் அறிவுமதியும் தன் படைப்பு முயற்சியைப் பயன்டுத்தியுள்ளார். ஆம் தமிழ்க்காதல் கொண்ட தன் நெஞ்சத்தைக் கவிதை வழி உலாவரச் செய்துள்ள திறம் கண்டு வியக்காமல் இருக்க முடியாது. எத்தனை ஆழமான சிந்தனை மிக அரிதான ஒப்புவமை. அவர் கவிதை உள்ளனவும் அவரின் புகழ் நிலைத்திருக்கும். ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மார்லன் பிராண்டோ

இப்படத்தின் வெற்றியைத் தொடர்ந்து பிராண்டோ முன்னணி நடிகர்களின் வரிசையில் வந்தார். பிராண்டோ மீண்டும் கசான் இயக்கத்தில் விவா சபடா (Viva Zapata) எனும் படத்தில் நடித்தார். ஒரு கிராமத்தான் எப்படி ஒரு நாட்டின் தலைவன் ஆகிறான் என்பதுதான் இப்படத்தின் கதை. இதில் முக்கிய கதாபாத்திரத்தில் ஆண்டனி குயினும் நடித்திருந்தார். 20 செஞ்சுரி ஃபாக்ஸ் (20th Century Fox) கம்பெனி படத்தைத் தயாரித்தது, 1952 ஆம் ஆண்டு இப்படம் வெளி வந்தது. இப்படத்தில் இவருக்கு ஜோடியாக நடித்த மரியா கேஸ்டெனடா (Maria Castenada) என்ற நடிகையை திருமணம் செய்து கொள்வதாக இருந்தார். மீண்டும் இப்படத்திற்கு சிறந்த நடிகருக்கான ஆஸ்கர் விருதுக்காக பிராண்டோ பரிந்துரைக்கப்பட்டார். ஆனால் இந்த முறையும் அவருக்கு விருது கிடைக்கவில்லை.

ஜான் ஹவுஸ்வுமன் (John Houseman) என்ற தயாரிப்பாளர் பிராண்டோவை (Julus Ceaser) ஜூலியஸ் சீஸர் என்ற திரைப்படத்தில் மார்க் ஆண்டனி (Mark Antony) யாக நடிக்க ஒப்பந்தம் செய்தார். இந்தப் படத்தை MGM நிறுவனம் தயாரித்தது. ஜோசப் மான்கிவைஸ் (Joseph Mankiewicz) இப்படத்தை இயக்கினார். இதன் படப்பிடிப்பு நடந்து கொண்டிருக்கும்பொழுது ஜூலியஸ் சீஸர் இறந்த பிறகு ஆண்டனி பேசும் அந்த வசனத்தை பிராண்டோ பேசி நடித்து முடித்த பின் படப்பிடிப்புத்தளத்தின் உள்ளே அனைவரும் கைதட்டி பிராண்டோவின் நடிப்பைப் பாராட்டினார்கள். இதேபோல் நம் நடிகர்திலகம் அவர்கள் ராஜாராணி என்ற படத்தில் கலைஞர் கருணாநிதி அவர்கள் எழுதிய 32 பக்க வசனத்தை ஒரே ஷாட்டில் பேசி முடித்தபொழுது படப்பிடிப்பு அரங்கமே கைதட்டிப் பாராட்டியது.

## சென்ற இதழ் தொடர்ச்சி

ஜூலியஸ் சீஸர் படத்திற்காக மீண்டும் சிறந்த நடிகருக்கான ஆஸ்கர் விருதுக்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். ஆனால் விருதை அவர் பெறவில்லை. The Hollywood Reporter எனும் பத்திரிகை மார்லன் பிராண்டோ, மார்க் ஆண்டனியாக சீஸரின் பிணத்தின் முன் நின்று பேசும் காட்சியில் சிறப்பாக நடித்திருந்தார் எனப் பாராட்டியது.

பிராண்டோவின் முதல் படமான தி மென் (The Men) திரைப்படத்தைத் தயாரித்த ஸ்டான்லி க்ராமர் (Stanley Kramer) அடுத்ததாக தி ஒய்ல்டு ஒன் (The Wild One) என்ற திரைப்படத்தை எடுத்தார். லாஸ்லோபெனெடெக் (Laslo Benedek) இப்படத்தை இயக்கினார். 1954 ஆம் ஆண்டு இப்படம் வெளி வந்தது. அமெரிக்காவில் இப்படம் மாபெரும் வெற்றியைப் பெற்றது.

பிராண்டோவும் இயக்குநர் (Kazan) கசானும் ஆன் தி வாட்டர் ஃப்ரண்ட் (On the Water Front) எனும் திரைப்படத்தில் மீண்டும் இணைந்தார்கள். இவர்கள் இருவரும் சேர்ந்து பணியாற்றும் மூன்றாவது படம் இது. முதலில் இப்படத்தில் லாஸ்ரியான்ஸ் எக்ஸ்பிரஸ் என்ற படத்தின் கதாநாயகனான ஃப்ராங்க் சினட்ரா (Frank Sinatra) தான் நடிப்பதாக இருந்தது. ஆனால் கடைசி நேரத்தில் பிராண்டோ நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டார். இத்திரைப்படத்தில் கார்ல்மால்டன், ராட் ஸ்டீஜர் ஆகியோரும் நடித்திருந்தனர். 1954 ஆம் ஆண்டு இப்படம் வெளிவந்து 8 அகாடமி விருதுகளைப் பெ ற்றது. இம்முறை பிராண்டோ சிறந்த நடிகருக்கான ஆஸ்கர் விருதைப் பெற்றார். எலியா கசன் சிறந்த இயக்குநருக்கான விருதைப் பெற்றார்.

20த் செஞ்சுரியின் தி ஈஜீப்ஸியன் (The Egyptian) எனும் திரைப்படத்தில் பிராண்டோ நடிக்கச் சம்மதித்தார். இதற்கு முக்கிய காரணம் ஒன்று உண்டு. அதாவது அந்த சமயம் பிராண்டோவின் தந்தை பெரும் கடன் சுமையில் இருந்தார். எனவே அவரது கடனை அடைக்க பிராண்டோவிற்குப் பணம் தேவைப்பட்டது. இதையறிந்த MGM நிறுவனம் தேவைப்பட்ட தொகை முழுவதையும் 20த் செஞ்சுரி நிறுவனம் பிராண்டோவிற்கு சம்பளமாகக் கொடுக்க முன் வந்தது. ஆகையினால் பிராண்டோ அந்தப்படத்தில் நடிக்கச் சம்மதித்தார். ஆனால் அந்தப்படத்தின் கதையை படித்த பின் பிராண்டோவிற்கு அந்தக்கதையின் மீதும் தான் நடிக்க வேண்டிய கதாபாத்திரத்தின் மீதும் எந்தவித ஈடுபாடும் இருப்பதாக அவருக்குத் தோன்றவில்லை. எனவே அப்படத்தில் நடிப்பதிலிருந்து விலகிக் கொண்டார். பிறகு வேறு வழியின்றி MGM நிறுவனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இப்படத்தை ஹன்னி கோஸ்டர் (Hunny Koster) என்ற இயக்குநர் இயக்கினார். இப்படத்தில் மார்லன் பிராண்டோ நெப்போலியன் போனோபார்ட் ஆக நடித்தார். இவருடன் ஸ்பார்டகஸ் என்ற திரைப்படத்தில் கதாநாயகியாக நடித்த ஜீன்சைமன்ஸ் நடித்தார். 1954ஆம் ஆண்டு இப்படம் வெளியானது. ஆனால் இப்படம் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை.

வேறு ஒரு நடிகரை வைத்து அந்தப் படத்தை எடுத்தார்கள். ஆனால் படம் தோல்வியைத் தழுவியது. இதனால் பெரும் நஷ்டம் அடைந்த MGM நிறுவனம் பிராண்டோ நடிக்காததால் எங்கள் கம்பெனிக்கு ஏகப்பட்ட நஷ்டம் ஏற்பட்டுவிட்டது எனக்கோரி பிராண்டோ மீது வழக்குத் தொடர்ந்தது.

இதற்கிடையே பிராண்டோவின் தாயார் உடல் நலம் மிகவும் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள். டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி 1954 ஆம் ஆண்டு மார்ச் 31ந் தேதி அவரது தாயார் காலமானார். தாயாரின் மரணம் பிராண்டோவைப் பெரும் பாதிப்பிற்குள்ளாக்கியது. தனக்கு ஏன் இப்படி ஒரு துயரம் நிகழவேண்டும் நாம் யாருக்கு என்ன கெடுதல் செய்தோம் எனப்பலவாறு மன உளைச்சலுக்கு ஆளானார். அதன் பிறகு தான் செய்த தவறுகள் அவரது மனதில் நிழலாடின. இதனால் மனமாற்றம் அடைந்த பிராண்டோ பின்பு 20th Fox Century கம்பெனியுடன் சமாதானமாகப் பேசி தான் செய்த தவறுக்குப் பிரதியுபகாரமாய் டிசைர் (Desire) எனும் திரைப்படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டார்.

ஆகவே இனிவரும் திரைப்படங்களில் தனது திறமையை வெளிக்காட்டும் வகையில் கவனம் செலுத்தத் துவங்கினார். எனவே மீண்டும் MGM நிறுவனத்திற்கு ஜோசப் எல் மன்கிவிஸ் (Joseph L Mankiewicz)ன் இயக்கத்தில் கைய்ஸ் அண்டு டால்ஸ் (Guys And Dolls) எனும் திரைப்படத்தில் நடித்தார். இத்திரைப்படம் 1955 ஆம் ஆண்டு வெளியாகி பெரும் தோல்வியைத் தழுவியது. அதன் பிறகு பிராண்டோ ஒரு மாறுதலுக்காக தி டி ஹவுஸ் ஆப் தி ஆகஸ்ட் மூன் (The Teahouse of the August Moon) என்ற திரைப்படத்தில் முற்றிலும் மாறுபட்ட நகைச்சுவைப் பாத்திரத்தில் நடித்தார். இயக்குநர் டானியேல் மான் (Daniel Mann) இப்படத்தை இயக்கினார். இப்படம் 1956 ஆம் வருடம் வெளியாகி மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றது. பிராண்டோவின் இன்னொரு பரிமாணத்தை மக்கள் ரசித்தார்கள்.

இதன் பிறகு பிராண்டோ சயோனரா (Sayonara) என்ற படத்தில் நடித்தார். இயக்குநர் ஜாஷ்வா லோகன் (MGMJoshua Logan) என்பவரால் இயக்கப்பட்டது. இப்படத்தை வார்னர் பிரதர்ஸ் தயாரித்தனர். இப்படம் 1957 ஆம் ஆண்டு வெளியானது. ஆனால் சுமாராகத்தான் ஓடியது.



# மாதமொரு சமையல்

**தேவையான பொருட்கள்**

| | | | |
|---|---|---|---|
| சேமியா | : 1 பாக்கெட் (500 கிராம்) | இஞ்சி (நறுக்கியது) | : 1டீஸ்பூன் |
| புளிக்காத தயிர் | : 4 கப் | புதினா (நறுக்கியது) | : 1டீஸ்பூன் |
| பெரிய வெங்காயம் | : 1 பொடியாக நறுக்கியது | கடுகு, சீரகம் | : 1/2 டீஸ்பூன் |
| தக்காளி | : 1 அலங்கரிக்க | உளுந்து, கடலைப்பருப்பு | : 1/2 டீஸ்பூன் |
| கேரட் (நறுக்கியது) | : 1டீஸ்பூன் | பெருங்காயப் பொடி | : 1 சிட்டிகை |
| மாதுளம் பழம் | : 1/2 கப் | உப்பு | : தேவையான அளவு |
| விதையில்லா கறுப்பு திராட்சை (நறுக்கியது) | : 1/2 கப் | வெள்ளரிக்காய் (நறுக்கியது) | : 1/2 கப் |
| பச்சை மிளகாய் | : 2 நறுக்கியது | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20த் செஞ்சுவரியின் தயாரிப்பில் எட்வர்டு டிமைடெரிக் (Edward Dmyteryk)ன் இயக்கத்தில் தி எங் லயன்ஸ் (The Young Lions) என்ற திரைப்படத்தில் நடித்தார் பிராண்டோ. 1958ல் வெளியான இப்படம் வியாபார நீதியாக நல்ல வெற்றியைப் பெற்றது. இப்படம்தான் பிராண்டோவின் வெற்றிப்பட வரிசையில் வந்த கடைசிப்படமாகும். இதன் பிறகு அவரது படங்கள் அனைத்தும் தோல்வியடைந்தன. அடுத்து 13 வருடங்கள் கழித்துத்தான் அவருக்கு வெற்றிப்படம் அமைந்தது. அதுதான் உலக வெற்றியாகக் கருதப்படும் தி காட்ஃபாதர்.

## திருமணம்:

பிராண்டோ நடிக்கும் நாடகங்களில் தன்னுடன் தொடர்ந்து நடித்து வந்த (Anna Kashfi) அன்னா காஷ்ஃபி எனும் நடிகையை விரும்பித் திருமணம் செய்து கொண்டார். இத்திருமணம் 1957 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11ந் தேதி நடந்தது. இத்தம்பதியருக்கு கிறிஸ்டியன் டோவி பிராண்டோ (Christian Dovi Brando) என்ற மகன் பிறந்தான். அப்பொழுது பிராண்டோவிற்கு 33 வயது. ஆனால் இந்தக் காதல் திருமணம் அதிக நாட்கள் நீடிக்கவில்லை. திருமணம் முடிந்து ஒரு வருடம் முடிவதற்குள் அதாவது 11வது மாதத்தில் இருவரும் செப்டம்பர் 25ஆம் தேதி 1958இல் பிரிந்தனர். மகன் பிறந்து சில நாட்களுக்குள் இருவரும் பிரிந்து விட்டனர். இது மேலை நாட்டு நாகரீகம்.

## கூட்டணி தயாரிப்பும் இயக்கமும்:

1955 ஆம் ஆண்டு பிராண்டோ, பிராண்டோவின் தந்தை, இயக்குநரும் நடிகருமான ஜார்ஜ் இங்கிலண்டு (George Englund) ஆகிய மூவரும் சேர்ந்து Pannebakes எனும் சினிமா கம்பெனியை ஆரம்பித்தார்கள். சார்லஸ் நெய்தர் (Charles Neider) என்ற நாவலாசிரியர் எழுதிய பிரசித்தி பெற்ற நாவலான தி அத்தண்டிக் டெத் ஆப் ஹென்றி ஜோன்ஸ் (The Authentic Death of Hendry Jones) என்ற கதைதான் திரைப்படமாக உருவானது. இப்படத்தில் மார்லன் பிராண்டோவுடன் கால் மால்டன் என்ற நடிகரும் நடித்தார். பிராண்டோ முதன் முதலில். இயக்கிய படம் ஒன் ஐய்டு ஜாக்ஸ் (One Eyed Jacks) இப்படத்தை பாரமவுண்ட் கம்பெனி இணைந்து தயாரித்தது. இப்படத்தை எடுத்து முடிக்க பிராண்டோ நீண்ட நாட்கள் எடுத்துக் கொண்டார். 1958 ஆம் ஆண்டு டிசம்பர் 2ஆம் தேதியில் ஆரம்பித்த இப்படம் 1959ஆம் ஆண்டு ஜுன் 2ஆம் தேதிதான் முடிந்து 1960ஆம் ஆண்டுதான் வெளி யானது. இப்படம் பிராண்டோ இயக்கிய திரைப்படம் என்பதால் மக்களிடையே மிகப் பெரிய எதிர்பார்ப்பு இருந்தது. அதேபோல் திரைப்படம் வெளி வந்ததும் மக்களிடையே நல்ல வரவேற்பையும் பெற்றது.

இந்த நீண்ட இடைவெளியில் பிராண்டோ தி ஃபிஜிடிவ் கைண்டு (The Figitive Kind) என்ற திரைப்படத்தில் நடித்தார். சிட்னி லுமெட் (Sidney Lumet) இப்படத்தை இயக்கினார். 1959ஆம் வருடம் வெளியான இப்படமும் சுமாராகவே ஓடியது.

## இரண்டாவது திருமணம்:

மோவிட்டா என்ற நடிகையை ஜூன் 4, 1960ஆம் ஆண்டு பிராண்டோ தனது 36வது வயதில் திருமணம் செய்து கொண்டார். அந்த இனிய இல்லற வாழ்க்கை எட்டு ஆண்டுகள் நீடித்தது பெரிய ஆச்சரியமே. ஆம் 1968ஆம் வருடம் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக இருவரும் பிரிந்து விட்டனர்.

## மியூட்டனி ஆன் தி பவுண்டி:

இதற்கு முன்பு இதே டைட்டிலில் மியூட்டனி ஆன் தி பௌண்டி (Mutiny on the Bounty) என்ற

## சேமியா பாகாலாபாத்

**செய்முறை :**

- சேமியாவை தண்ணீரில் வேகவைத்து நீரை வடித்துக் கொள்ளவும்.
- ஒரு கடாயில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் கடுகு போட்டு பொரிந்ததும், சீரகம், உளுந்து, கடலைப்பருப்பு, பெருங்காயப்பொடி சேர்த்து பொன்னிறமாக பொரிந்ததும் வெங்காயம் போட்டு வதக்கவும்.
- வெங்காயம் வதங்கியவுடன், பச்சை மிளகாய், இஞ்சி போட்டு வதக்கவும்.
- ஒரு பெரிய பாத்திரத்தில் சேமியா, தயிர், பொரித்தவற்றை சேர்த்து சிறிது உப்பு சேர்த்து நன்றாக கலக்கவும்.
- கடைசியாக அரிந்த வெள்ளரிக்காய், தக்காளி, கேரட், மாதுளம் பழம், அரிந்த திராட்சை எல்லாவற்றையும் சேர்க்கவும்.
- இவற்றை நன்றாக கலந்து குளிர் சாதனப் பெட்டியில் 15 நிமிடங்கள் வைக்கவும்.
- புதினாவை போட்டு அலங்கரிக்கவும்.
- இப்பொழுது எடுத்து குளிர்ச்சியுடன் பரிமாறவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைப்படம் 1935இல் வெளிவந்தது. அதில் சார்லஸ் லாப்டனும் கிளார்க் கேபிளும் நடித்திருந்தனர். அதன் பிறகு இதே டைட்டிலில் MGM நிறுவனம் தயாரித்த மியூட்டனி ஆன் தி பவுண்டி என்ற படத்தில் பிராண்டோ நடித்தார். இப்படத்தில் பிராண்டோ நடிக்க ஒப்புக் கொண்டதற்கு மிகப் பெரிய காரணம் ஒன்று உண்டு.

அதாவது இதே MGM நிறுவனம் லாரென்ஸ் ஆப் அரேபியா (Lawrence of Arabia) என்ற திரைப்படத்தில் நடிக்க பிராண்டோவை ஒப்பந்தம் செய்தது. ஆனால் பிராண்டோ ஏதோ சில காரணங்களால் மறுத்துவிட்டார். எனவே இப்பொழுது இப்படத்தில் நடிக்க அவர்கள் கேட்டதால் பிராண்டோ ஒப்புக் கொண்டார். மியூட்டனி ஆன் தி பவுண்டி படத்திற்கு கதையாசிரியராக நியமிக்கப்பட்டவர் எரிக் ஆம்ப்லர் என்பவர். முதலில் கதையைக் கேட்ட பிராண்டோ கதை பிடிக்கவில்லை என்று கூறிவிட்டார். அதன் பிறகு MGM நிறுவனம் சார்லஸ் லெடரர் ( Charles Lederer) என்ற கதையாசிரியரை நியமித்தது. இவர் எழுதிய கதையும் பிராண்டோவிற்குப் பிடிக்கவில்லை. சார்லஸ் நார்ஃப் (Charles Nordhoff) என்பவரும் ஜேம்ஸ் நார்மன் ஹாலும் (James Norman Hall) சேர்ந்து திரைக்கதை அமைத்தனர். லூயிஸ் மைல்ஸ்டோன் (Leuis Mile-stone) இப்படத்தை இயக்கினார். இரண்டு வருடத் தயாரிப்பில் இப்படம் 1962இல் வெளியாகி மிகப் பெரிய தோல்வியைச் சந்தித்தது.

இதற்குப் பிறகு பிராண்டோ நடித்த பெரும்பாலான படங்கள் மிகப் பெரிய தோல்விப் படங்களாகவே அமைந்தன. மியூட்டனி ஆன் தி பவுண்டி படத்திற்குப் பிறகு பிராண்டோ தி அக்லி அமெரிக்கன் (The Ugly American) என்ற திரைப்படத்தில் நடித்தார். ஜார்ஜ் இங்கிலண்டு (Geroge Euglund) இப்படத்தை இயக்கினார். யூனிவர்ஸ் நிறுவனம் இப்படத்தை தயாரித்தது. 1963இல் வெளியான இப்படமும் படுதோல்வியைச் சந்தித்தது. இப்படம் வெளியான சமயத்தில் பிராண்டோ சிவில் ரைட்ஸ் மூவ்மெண்ட் (Civil Rights Movement) என்ற இயக்கத்தில் சேர்ந்தார். அப்பொழுது பிளாக் ரைட்ஸ் ( Black Rights) என்னும் கருப்பர் இன மக்களுக்கு ஆதரவாக வாஷிங்டனில் நடந்த பேரணியில் கலந்து கொண்டார். இது வெள்ளையர் இன மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பின் காரணமாக தி அக்லி அமெரிக்கன் திரைப்படம் தோல்விப்படமாக அமைந்தது.

தமிழ் நாட்டில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் பழைய காங்கிரஸில் இருந்து இந்திரா காங்கிரஸுக்கு மாறினார். அந்த சமயத்தில் சிவாஜி அவர்கள் நடித்த பாட்டும் பரதமும் என்ற திரைப்படம் வெளியானது. திரையுலகம் மிகவும் எதிர்பார்த்த வெற்றி மக்களிடம் பிரதிபலிக்கவில்லை. பாட்டும் பரதமும் தோல்வியைச் சந்தித்தது. காரணம் சிவாஜி அவர்களின் அரசியல் மாற்றம்தான். அதேபோல் மக்கள் திலகம் எம்ஜியார் அவர்கள் தனது எம்.எல்.சி பதவியை ராஜினாமா செய்தார். அச்சமயம் வெளியான என் கடமை என்ற திரைப்படமும் இதேபோல் வெற்றியைப் பெறவில்லை. காரணம் எம்ஜியாரின் அரசியல் மாற்றம்தான்.

பிராண்டோ மறுபடியும் யூனிவர்ஸ் நிறுவனத்திற்கு பெட் டைம் ஸ்டோரி (Bed Time Story) என்ற படத்தில் நடித்தார். இப்படத்தை ரால்ஃப் லெவி (Ralph Levy) இயக்கினார். 1964இல் வெளியான இப்படம் மிகச் சுமாராக ஓடியது. அடுத்ததாக Monturi / The Saboteur Code Name Monturi என்ற படத்தில் நடித்தார். இப்படத்தை 20th Fox Century தயாரித்தது. பெர்னார்டு விக்கி (Bernard Wicki) இப்படத்தை இயக்கினார். 1965இல் வெளியான இப்படமும் வழக்கமாக தோல்வியைச் சந்தித்தது.

தி சேஸ் (The Chase) என்ற படத்தில் பிராண்டோ காவல் துறை அதிகாரியாக நடித்தார். இப்படத்தை கொலம்பியா கம்பெனி தயாரித்து ஆர்தர் பென் (Arthur Penn) இயக்கினார். இதில் பிராண்டோவுடன் ஜேன் ஃபோண்டோ (jane Fonda) ராபர்ட் ரெட் ஃபோர்டு (Robert Red Ford) போன்ற பெரிய நட்சத்திரங்கள் நடித்திருந்தாலும் இது பெரும் வெற்றியாக ஜொலிக்கவில்லை. அடுத்து யூனிவர்ஸ் தயாரிப்பான தி அப்பலூசா (The Appaloosa) என்ற படத்தில் நடித்தார். இப்படத்தை இயக்குநர் சிட்னி J ஃப்யூரி இயக்கினார். இப்படத்தைப் பற்றிக் குறிப்பிட வேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றால்

## நம்பிக்கை மூலை

ஒரு மனிதனுக்கு, மனைவி – மக்கள் – நண்பர்கள் அனைவருடனும் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன. உலகமே தனக்கெதிராக திரும்பிவிட்டதாய் எண்ணிய அந்த மனிதன், தன் குருவிடம் சென்று முறையிட்டான். உன்னுடன் யார் பேசினாலும் அவர்களின் ஒவ்வொரு வார்த்தையையும் உளப்பூர்வமாக புரிந்துகொள்ள முயற்சி செய். என்றார் குரு

ஒரு மாதம் கழித்து வந்தவன் சுவாமி! எல்லாம் சரியாகி விட்டது. அவர்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் புரிந்து கொள்கிறேன். என் வாழ்க்கை சரியாகி விட்டது என்றான்.

குரு சொன்னார். இது போதாது! அவர்கள் பேசுகிற வார்த்தைகளைப் புரிந்து கொண்டதால் – உன் வாழ்க்கை சரியானது. இனி அவர்கள் பேசாத வார்த்தைகளையும் புரிந்து கொள்ள தொடங்கு – வாழ்க்கை சொர்க்கமாகும்.

சொல்லப்படாதவற்றை புரிந்துகொள்வதிலேயே உறவுகள் உறுதி பெறுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திரைப்படம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து படத்தின் இயக்குநருக்கும் பிராண்டோவிற்கும் மனம் ஒத்துப் போகவில்லை. இதனால் 1966ஆம் ஆண்டு வெளியாகி இப்படமும் தோல்வியைத் தழுவியது.

## சார்லி சாப்ளின் & சோபியா லாரென்:

(Charlie Chaplin) சார்லி சாப்ளின் இயக்கிய ''எ கவுண்ட்டீஸ் ஃப்ரம் ஹாங்காங்'' (A Counties From Hongkong) எனும் படத்தில் பிராண்டோவும் அவருக்கு ஜோடியாக சோபியா லாரென்னும் நடித்தனர். யூனிவர்ஸ் தயாரித்த இப்படம் 1967இல் வெளியானது. மிகவும் பழமையானதாக இருந்த படியாலும், மேலும் தலைமுறை இடைவெளியாலும் இப்படம் பெரும் தோல்வியைச் சந்தித்தது.

## எலிசபெத் டெய்லர்:

1967இல் வார்னர் பிரதர்ஸ் தயாரித்த ரெப்ஃலெக்ஷன்ஸ் இன் எ கோல்டன் ஐ (Reflections In A Golden Eye) என்ற திரைப்படத்தில் எலிசபெத் டெய்லரும் பிராண்டோவும் ஜோடி சேர்ந்து நடித்தனர். இப்படத்தை இயக்கியது பிரபல இயக்குநர் ஜான் ஹஸ்டன் (John Huston). இதுவும் பிராண்டோவின் தோல்விப்பட வரிசையில் இடம் பிடித்தது. பிராண்டோ தனது நண்பர் மற்றும் இயக்குநருமாகிய கிறிஸ்டியன் மார்கண்டு (Christian Marquand) என்பவருடன் கேண்டி (Candy) என்ற திரைப்படத்தில் இணைந்தார்.

1969ஆம் ஆண்டு யூனிவர்ஸ் நிறுவனம் தயாரித்த, தி நைட் ஆப் தி ஃபாலோயிங் டே (The Night of The Following Day) என்ற படத்தில் நடித்தார். ஹியூபட் கார்ன்ஃபீல்டு (Hubert Cornfield) இப்படத்தை இயக்கினார். இவ்விரண்டு படங்களும் எதிர்பார்த்த மாதிரியே தோல்வியைத் தழுவின. ஒரு மாறுதலுக்காக சமுதாய விழுப்புணர்ச்சிகளை மையமாக உடைய திரைப்படத்தில் நடிக்க விரும்பினார். அவ்வாறு அவர் நடித்த திரைப்படம்தான் கொய்மதா (QUEMADA). இப்படம் பிறகு பர்ன் (BURN) எனப் பெயர் மாற்றம் பெற்று வெளியானது. இப்படத்தை யுனைட்டெட் ஆர்ட்டிஸ்டஸ் (UNITED ARTISTES) நிறுவனம் தயாரித்தது. ஜில்லோ பொன் டெகோர்வோ (GILLO PONTECORVO) இயக்கினார். அனைத்துக் கலைஞர்களின் கடின உழைப்பாலும் பெரும்பாலோரின் எதிர்பார்ப்பிற்கு மத்தியிலும் துரதிர்ஷ்டவசமாக இப்படம் தோல்வியைக் கண்டது.

அடுத்து பிரபல இயக்குநர் மைக்கேல் வின்னரின் இயக்கத்தில் தி நைட் கம்மர்ஸ் (The Nightcomers) என்ற படத்தில் நடித்தார். 1971ஆம் ஆண்டு வெளியான இப்படம் பத்திரிகைகளின் ஏகோபித்த பாராட்டுக்களைப் பெற்றாலும் ஏனோ மக்கள் மத்தியில் ஏகோபித்த வரவேற்பைப் பெறவில்லை. தொடர்ந்து படங்கள் தோல்வி அடைந்த காரணத்தால் பிராண்டோவிற்கு புதிய பட வாய்ப்புகள் வரவில்லை.

இந்தக் காலகட்டங்களில் பிராண்டோ என்ற பெயரைக் கேட்டாலே தயாரிப்பாளர்கள் அவரை ஒப்பந்தம் செய்ய வேண்டாம் என்ற அளவிற்கு பிராண்டோவின் பெயர் சீர்கெட்டிருந்தது. பிராண்டோ ஒழுங்காக வருவதில்லை. அப்படியே வந்தாலும் இயக்குநர்களை மதிக்காமல் தன் போக்கில் நடந்து கொள்வார். ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லிவிட்டு திடீரென காணமாமல் போய்விடுவார் என அவரைப் பற்றி பல்வேறு குற்றச்சாட்டுகள் வந்தன. பத்திரிகையாளர்களுடன் மோதல் போக்கை அவர் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தார். ஹாலிவுட்டில் பிராண்டோவின் பெயர் மெல்ல சரியத் தொடங்கியது. இனி பிராண்டோவின் சகாப்தம் முடிந்தது என அனைவரும் கருதினர். மேலும் அவர் உணவுக்கட்டுப்பாட்டில் கவனம் இல்லாமல் இருந்ததால் உடல் பருமன் கூடி எந்த வேடத்திற்கும் பொருத்தமில்லாமல் காணப்பட்டார். படவாய்ப்புகள் இல்லாத காலகட்டத்தில் டியூடியாரா (Tutiaroa) என்னும் தீவைச் சொந்தமாக வாங்கி அதை செம்மைப்படுத்தத் துவங்கினார். அப்படி செம்மைப்படுத்துவதில் இதுவரை தான் சம்பாதித்த பணம் அனைத்தையும் செலவிட்டார். கடைசியில் பணப்பற்றாக்குறைக்குத் தள்ளப்பட்டார். ஒருபுறம் பெயர் முழுவதும் கெட்டுப் போன சூழல், நடிக்க வாய்ப்பே இல்லாத உடல், சேர்த்த பணமும் செலவழித்து கையறு நிலை, அரசாங்கம் பத்திரிகை என அனைவரிடமும் சண்டை. இனி பிராண்டோவின் கதை முடிந்தது என அனைவரும் நினைத்த சமயத்தில்தான் பிரன்ஸிஸ் போர்ட் கொப்போல்லா எனும் இயக்குநரிடமிருந்து பிராண்டோவிற்கு அழைப்பு வந்தது.

தொடரும்

### டிப்ஸ் :

குளிர், மழை காலத்தில் தொண்டை வலி, கமறல் இருமல் போன்றவற்றுக்கு வெறும் மிளகை வாயில் போட்டால் காரமாக இருக்கும். ஒரு கரண்டியில் நெய்யை விட்டுக் காய்ந்ததும், ஒரு சிறு கட்டி வெல்லத்தைப் போட்டு பொங்கி வரும்போது மிளகு அரை டீஸ்பூன் போட்டு அடுப்பை அணைத்து விட்டு, சற்று ஆறியதும் எடுத்து உருட்டி வாயில் போட்டுக்கொள்ள இதமாக இருக்கும். இருமலும் அடங்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய கறுப்பு இராட்சதப் பறவைகளின் இறகுகளைத் தலைப்பாகத்தில் அணிந்தபடி இரண்டு குதிரைகள் கம்பீரமாக நிற்கின்றன. கறுப்பு வெள்ளி கலவையாகிய கயிறுகளால் வண்டிலோடு அவை பிணைக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு வெள்ளையர் ஒருவர் குதிரை வண்டியின் முற்பக்கத்தில் குதிரைகளின் கயிற்றை லாவகமாகப் பிடித்துக்கொண்டிருந்தார். கறுத்தத் தொப்பியும், கறுத்த நீண்ட கோட் சூட்டும், கறுப்பு நிற கையுறைகளையும அணிந்துகொண்டு கம்பீரமாகத்தான் நின்றார். குதிரை வண்டியின் பின்னால் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட எழுத்துக்கள் விழித்துக்கொண்டிருந்தன: 'மதர்' 'பாதர்' 'சிஸ்ரேஸ்' 'பிறன்ஸ்' . .

குதிரைகள் இதுபோன்ற பல்லாயிரம் பவனிகளைப் பார்த்திருக்கின்றன போல இருக்கிறது. தங்களை அழகு பார்த்து கம்பீரமாக்கி வசப்படுத்தி மிடுக்கிக்கொண்டு நின்றன. குதிரை வண்டியின் முன்னால் மற்றுமொரு வெள்ளைக்காரர் அணிவகுத்து வழிநடத்த ஆயத்தமாகி ஒரு ராஜ நடையில் நின்றுகொண்டிருந்தார்.

அந்தக் குதிரை வண்டியில் தமிழ் வாலிபன் ஒருவனின் உடல் லண்டன் கிழக்குப் பட்டணத்தில் பவனிக்கு ஆயத்தமாகிறது. அவனும் நெஞ்சு நிமிர்ந்து தூங்கிக் கொண்டிருக்கிறான். அந்தக் குதிரைகள் மிளிர்வற்ற விழிகளால் அவனைத் தாள லயத்தோடு தாலாட்டிக் கொண்டிருப்பது போலிருந்தன. மௌனமாக பிரயாணிக்கும் அவனுக்குப் பின்னால் அந்த வாலிபனின் அம்மா, அப்பா, சகோதரிகள் உணர்விழந்த வெளுத்த முகங்களோடு காணப்படுகின்றனர்.

ஊர்வலம் ஆரம்பமாகிறது. வாகனங்கள் சலனங்களற்று ஊர்ந்துகொண்டிருக்கின்றன. எனது உடம்பு உயிராவல்களைச் சிந்தித்து உழன்றபடி கெந்தகித்துக் கொண்டிருக்கிறது..

மனித வாழ்வில் எண்ணற்ற நிகழ்ச்சிகள் நிகழ்ந்து போகின்றன. பிறப்பும் இறப்பும் நிகழ்ச்சிகள் தானே! இந்த ஐரோப்பியர்கள் இறப்பினை கவலையான ஒரு நிகழ்ச்சியாக மட்டும் எடுத்துக்கொண்டு வாழ்க்கையை உடனேயே நகர்த்துவதைப் பார்த்திருக்கிறேன்.

பிறப்பு இறப்பு என்ற இந்த இரண்டுக்கும் இடையில் உலகம் பல்வேறு உணர்வுகளில் வழுக்கி விழுந்து நெளிந்து சுருங்குகின்றது. இந்த வாலிபன் வாழ்க்கையை நுகரவோ சுவைக்கவோ இல்லையே! எந்தவித எதிர்வினையும் புரியாத ஒரு தாயின் உணர்வுகள் குமுறல்களாக தன் உயிரற்ற செல்வ மகனின் உடம்பில் உதிர்ந்து கொண்டிருந்தன. அந்தக் காட்சிகளின் கோர வடிவங்கள் எல்லாமே 'அலை அலை'யாக வந்து என் நாளங்களில் நர்த்தனமாடின.

அந்தத் தமிழ் வாலிபனின் ஊர்வலம் லண்டன் மாநகரத்தை ஊடறுத்துச் சென்றுகொண்டிருக்கிறது. கறுப்புக் கார்கள் அபாய மோட்டார்களின் அவசர மின்விளக்குகளை மின்ன விட்டுக்கொண்டு அணிவகுத்து அலங்கரித்துக்கொண்டிருந்தன. பாதசாரிகள் எந்த வித வேறுபாடுமின்றி தலை சாய்க்கிறார்கள். தொப்பிகள் அணிந்திருந்தவர்கள் தொப்பிகளைக் கழற்றுகிறார்கள். பக்கத்து ரோட்டுக்களில் பச்சை விளக்கு வந்த போதும் வாகனங்களுக்கு வழிவிட்டுத் தருகிறார்கள். இறுதி யாத்திரைக்கு இவ்வளவு மரியாதை செலுத்துகிறார்கள்.

கோபுரம்போன்று காணப்படும் பழைய கோயில் ஒன்று. பூச்சுக்கள் இல்லாது தெரிகிறது. கறுப்பு வெள்ளை உடுப்புக்களோடு சனக்கூட்டம். வெள்ளையர்கள், கறுப்பர்கள், ஆசியர்கள் என்று எந்த வித வேறுபாடும் இன்றி அந்தக் கோயிலுக்கு முன்னால் சோபை இழந்து குழுமியபடியிருக் கிறார்கள். கோயில் மணிகள் 'டிங் டாங் டிங்'. என்று ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கிறது. அந்த வாலிபனை அவை ஆரவாரித்து வரவேற்பது போலிருக்கின்றது. அந்தக் கறுப்புக் குதிரைவண்டில் கோயிலின் முன்பாக நிறுத்தப்படுகிறது.

ஓயாமல் பிதற்றிய காற்று ஓய்ந்துவிட்டதுபோல் தெரிகிறது. 'கிலுகிலு'த்த மரங்கள் எல்லாம் சலனமற்று நிற்பதுபோலிருக்கின்றன. வெட்ட வெளிச்சமாகக் கிடந்த வானமண்டலங்கள் கறுத்து திரண்டுகொண்டு வருகிறது. மயானத்தின் சாம்பல் எங்கும் அப்பிக்கிடப்பதுபோலிருந்தது.

நீட்டு உடுப்புகளை அணிந்த சமயக் குருமார்கள் வந்து அந்த வாலிபனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசீர்வதிக்கிறார்கள். பின்னர் கறுப்பு நீட்டுக் கோட்போட்ட வெள்ளைக் காரர்களோடு உறவினர்களும் அந்த வாலிபனின் உடல் சுமந்த சவப்பெட்டியை ஏந்திச் சென்றார்கள். கோயில் வாயில் அகன்ற வாயைப் பிளந்துகொண்டு நிற்பதுபோல் இருந்தது. கோயிலின் நடுவாகச் சுமந்து செல்லப்பட்ட அந்த சவப்பெட்டி பீடத்துக்கு முன் ஒதுக்கப்பட்ட இடத்தில் வைக்கப்படுகிறது.

துாபங்கள் காட்டியபடி ஆராதனைகள் ஆரம்பமாகின்றன. பாடல்களோடு, ஆராதனைகளின் பாதியில் அந்த இளைஞனின் பெருமைகளை பிரலாபித்து அஞ்சலி

உரைகளும் கசிந்துகொண்டிருந்தன. இளமை தெறிக்கும் உடலுக்கு அந்த அஸ்தமன உருகலில் வெடித்துக் கிளம்பும் கரிய புயல்களின் சத்தம் கேட்கிறதோ என்னவோ தெரியவில்லை... கலந்து வரும் ஆங்கில தமிழ் உரைகளோடு சீறல்களின் சத்தங்களும் சேர்ந்து ஒலித்துக்கொண்டிருந்தது.

அந்த இளைஞனின் நம்பிக்கை, அன்பு, நேசம், விடாமுயற்சி, திட்டமிடல் போன்ற சிறப்புக்களை அவனோடு வேலை பார்த்த அதிகாரிகளும் தோழர் தோழிகளும் நினைவில் மீட்டனர். இறுதித் தனிமையோடு இருக்கும் அவனின் நினைவுகளை எந்த நீரில் மூழ்கி ஒழிக்க முடியும்?.. அவனின் சுய ருபங்களைக் கேட்டு மகிழ்ந்துபோனேன். என்னையும் அறியாது அவன் மீது எழுந்த கருணை என் கண்களை கண்ணீர்க் குமிழ்கள் ஆக்கிக் கொண்டிருந்தன.

மாறி மாறி பாடல்களும் வாத்தியங்களும் ஒலித்தபடி. இசை என்பது தனிமொழியாகி ஆழ்ந்து அழுங்குவதுபோல் கேட்கிறது. பைபிள் வாக்கியங்களும் வலம் வந்துகொண்டிருக்கின்றன. அந்த வாக்கியங்கள் தரையை மோதி பாதாளத்தைப் பிளந்து உள் நுழைகிறது போலிருக்கிறது. பலிப்பூசையின் நடுப்பகுதி. காணிக்கைகள் கொடுக்கும் நேரம்.

கோயில்களில் காணிக்கைகளை வரிசையாக கொண்டு சென்று குருவானவரிடம் கொடுப்பதைப் பார்த்திருக்கிறேன். குழந்தைகள், பெரியவர்கள், ஆண்கள், பெண்கள் என்று வேறுபாடின்றி நீட்டு வரிசையில் சென்று கொடுப்பார்கள். பூக்கள் பழங்கள், காய்கறிகள், வைன் போத்தல்கள், மெழுகுதிரிகள் என்று காணிக்கைகளை அலங்கரிப்பார்கள்.

ஆனால் இங்கே அந்த வாலிபனின் பெற்றோர் மட்டுமே காணிக்கைகளை சிவந்து உருளும் கண்ணீரோடு எடுத்துச் சென்றனர். திரும்பவும் அந்தத் தாயை விழித்துப் பார்த்தேன். என்னால் நம்பவே முடியவில்லை. நான் சிறு வயதில் பார்த்த அந்த முக்காடு போட்ட பெண்ணா அந்தக் காணிக்கையை எடுத்துச் செல்வது? அந்த வாலிபனின் சிறிய பராயம் என் கண்களை உலுக்கி அசைக்கிறது.

ஊருக்குள் தான் காதலித்துத் திருமணம் செய்த 'முஸ்லிம்' பெண் என்பதை அடையாளப்படுத்திக்கொண்டே இருந்தவள். எம்மை காணும்போதெல்லாம் அந்தப் பெண் தனது முக்காடுக்குள்ளால் தன் முகத்தைக் காட்டி 'டொக்'கென்று சிரித்துக்கொள்வதும்... சிறுவன் சிணுங்கிக்கொண்டு எந்த நேரமும் அந்த உம்மாவோடேதான் நிற்கிறதும்.... அப்பா அவனை கையில் பிடித்தபடி சிரிப்புக்காட்ட முனைகிறதும். எல்லாமே காட்சிகளாகி என்னுள் விரிந்து கொண்டிருந்தன.

நான் அன்று பார்த்த அதே அந்தச் சிறு பையன்தானா இப்போ அசைவற்று அமைதியுற்றுக் கிடக்கிறான்.? நான் அன்று பார்த்த முக்காடு போட்ட அந்தப் பெண்தானா காணிக்கையோடு கசிந்து நெரிந்துகொண்டு செல்கின்றார்?

கோயிலுக்குள் அந்த இளைஞனின் சவப்பெட்டி திறக்கப்படுகின்றது. கண்ணாடி போட்டுக்கொண்ட அந்தப்பரந்த முகம் பிரகாசித்துக்கொண்டுதான் இருக்கிறது. பிரிவு என்கின்ற கொடூர வலியின் உச்சக்கட்டத்தின் உணர்வுகள் மிகுந்து எழுகின்றது. அமைதியான அழுகுரல்கள்.

அங்கு வந்தவர்கள் அத்தனை பேரும் எழுந்து வரிசையாக நிற்கிறார்கள். அசைந்து அசைந்து சென்று ஆசீர் தெளிக்கிறார்கள். வணங்குகிறார்கள். மனிதன் மரணித்த பின்னர் எழுகின்ற மரியாதைகள். மனதில் கேள்விகள் தொடர்ந்து குடைகின்றது. பீடத்தில் ஒருவர் 'கிற்றார்' ஒலியில் 'எல்லாம் லேசுதான். . இசையை எழுப்பிக் கொண்டிருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இசை எழுப்பிய சோகம் என்னை உலுப்பி விட்டது. மறைந்துபோன உறவுகள் வந்து என்னைக் குலுங்கச் செய்தன. மௌன முகாரியுள் ஓலங்களும் விசும்பல்களும் அந்தப் பிணத்தைச் சுற்றி மலர் வளையங்கள் போல் சொரிந்து கொண்டிருந்தன. வானம் இருண்டு அழத் தொடங்குகிறது. அந்த வாலிபன் திரும்பவும் அணைத்து தூக்கப்படுகின்றான். அந்தப் பெட்டியை, பிரேதப் பெட்டியை உறவினர்கள் உரிமை தட்டி தூக்கிக் கொள்கிறார்கள். கம்பீரமாக காத்து நிற்கும் குதிரை வண்டியினுள் திரும்பவும் சடலம் பத்திரமாக வைக்கப்படுகின்றது.

வானம் இருண்டு முழங்குகிறது. என்ன இது? சூன்யம் சுழித்துக்கொண்டிருக்கிறது. திரும்பவும் அந்த வாலிபனின் ஊர்வலம் தொடர்கிறது. விட்டதிலிருந்து தொடர்வதுபோல். .

குடும்பம், உறவுகள், பந்தம், பாசம் எல்லாம் பாதையோர மரங்கள் மாதிரி பார்வையில் உரசிக் கடந்து போகின்றன. இயற்கையும் சேர்ந்து மழையாகிப் பொழிந்து கொண்டிருக்கிறது. 'புலனாகின்ற அனைத்துமே அழிந்துபோய்விடும் விரைவாக' என ஒரு தீர்மானத்தைச் செதுக்க ஆரம்பித்துவிட்டது என்னுடைய மனம். லண்டன் வீதியோரங்களின் அழகான மரங்களெல்லாம் சோபை இழந்து இருண்டு ஒதுங்கி நின்று அவனுக்கு தலைசாய்க்கின்றன போலிருந்தது.

மாலை தன்னை கூராக்கிக் கொண்டிருக்கிறது. ஊர்வலம் தொடர்கிறது... என் மனம் நொதிப்பது போலிருக்கிறது. "மனிதன் பிறப்பதற்கு முன் எங்குமே இல்லை. இறந்த பின்னர் தென்படாமலே போகின்றான். நடுவில் மட்டும் நிகழ்ந்த செயல்கள் உண்மையானவையோ, நிரந்திரமானவையோ அல்ல"

'மரணம்' என்பது மனிதன் சிந்திக்கவேண்டிய முக்கிய சடங்கு. நானும் இப்படித்தான ஒருநாள். . திடீரென்றும் நான் மரணிக்கலாம். மனிதர்கள் ஏன் நாம் மகிழ்ச்சியில்லாமல் இருக்கிறோம். எரிச்சல்படுகின்றோம். கோபப் படுகின்றோம். சண்டை பிடிக்கின்றோம் பிரிந்து வாழ்கின்றோம். விட்டுக்கொடுக்கின்றோம் இல்லை. இலக்கற்ற ஒரு நடை தான் பயின்று கொண்டிருக்கின்றோம்.

நான் அரச படங்களில் பார்த்த பென்னாம்பெரிய இரும்புக் கம்பிகளாலான கதவு மாதிரி இருக்கிறது. காவலாளிகள் வரவேற்கிறார்கள். குறிப்பிட்ட இடத்தில் குதிரை வண்டில் சென்று தரிக்கின்றது. தனது மரணம் விரைவில் என்பதை அறிந்து தனது அடக்கு இடத்தையும் தெரிவு செய்திருந்தானாம் அந்த வாலிபன். தன் நெடுந் தூக்கத்திற்கு அந்த வாலிபன் தேர்தெடுத்த இடம் அது. என்ன திட்டமிட்ட துணிச்சல்!. இது என்ன கொடுமை என்று வேதனைப்படுகின்றது என் மனம்.

புதிதாக அமைந்திருந்த அந்தக் பெரிய நிலப்பரப்பில், இறந்தவர்களின் பெயர்கள், ஆண்டுகள் பொறிக்கப்பட்டு 'குட்டிக் குட்டி' பெட்டிக் கட்டிடங்கள் விழித்துக்கொண்டு நிற்கின்றன. அங்கு வந்தவர்களின் முகங்கள் அத்தனையுமே வேதனைகள் உருவாகி இயலாமையோடு வெறிப்பதை உணர்கின்றேன். எமது இறுதி இருப்பிடம் இங்குதான் என்று ஒவ்வொருவரும் எண்ணிக் கொண்டு கரைந்து மறைகிறதை என்னால் அவதானிக்கமுடிகிறது.

அந்த வாலிபன் இப்போ அழகிய சோலைக்கு வந்துவிட்டான். குதிரை வண்டிலில் இருந்த மலர்வளையங்கள் வந்து குவிகின்றன. மலர்களால் பொறிக்கப்பட்ட பெயர்கள் விழித்துச் சிமிட்டுகின்றன. 'மதர்' 'பாதர்' 'சிஸ்டேர்ஸ்' பிறன்ஸ்' 'சித்தப்பா' என்று அழகிய மலர் வளையங்களாகத் தொடர்கிறது. கைகளில் பூக்கொத்துக்களை வைத்துக்கொண்டும், அழகிய பூ இதழ்களை அள்ளி வைத்துக்கொண்டும் அந்த வாலிபனை எதிர் பார்த்து நிற்கிறார்கள் அங்கு வந்தவர்கள். எல்லோரையும் சுற்றிப் பார்க்கிறேன். எத்தனை நிற நிறமான பூக்கள். அந்த மலர்களில் இருந்து எந்த வித வாசனையும் கிளம்பவில்லை. இன்னும் அழுது வடித்துக் கொண்டிருக்கிறது வானம்.

கயிறுகள் அடியில் போடப்பட்டு குதிரையில் வந்த வெள்ளையர்கள் குழியுள் அவனை இறக்குகிறார்கள். கவனமாக இறக்குகிறார்கள். நிதானமாக இறக்குகிறார்கள். மழைத்தூறலிலும் மண்கள் சொரியவில்லை. நீரடைத்த விழிகளோடும் நடுங்கும் விரல்களோடும் வாலிபனின் தாய் மலர்களைத் தூவிக்கொண்டு சாய்கிறாள். அப்பா அந்தத் தாயைத் தாங்கிப் பிடிக்கிறார். எடையற்ற பூவிதழ் போல் அவள் எனக்குத் தென்படுகிறாள். தாங்கமுடியாத தன் குழந்தையின் சோகத்தில் அந்தத் தாய். மூழ்கிக்கொண்டிருக்கிறாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘எங்கேயடா போறாய்?’ அக்காவின் இறுதிக் கேள்வி. அழுது சோர்ந்து விழும் அக்காவை அத்தான் அணைத்துக் கொள்கிறார்.

‘மம்மி மம்மி மாமா என்றபடி’ அவன் தங்கையின் குழந்தை தாயைத் தடவி முகத்தை வருடிக்கொண்டிருந்தது. தங்கையின் கணவர் அவர்களைக் கட்டியணைத்தபடி இருந்தார்.

அங்கு வந்தவர்கள் எல்லோரும் மண்களைத் தூவிக் கொண்டிருக்கிறார்கள். உரிமை மண்ணை போடுகின்றார்களாம். பூவிதழ்களும், பூக்களும், மண்ணும் அவன் மேல் கலந்துகொண்டிருந்தன. என் கைகள் நிறைந்த பூக்களால் அவனைத் தூவி வணங்கினேன்.

வெள்ளைக் கார குருவானவர் தனது இறுதி ஆசீரைப் பொழிகின்றார். “நித்திய பேரின்பத்தில் அவர் வாழ்ந்துகொண்டிருப்பார்” குருவானவர் குரல் கேட்டு அவனின் அம்மா சிறிது சிறிதாக விழித்துக் கொண்டிருக்கிறாள். ‘நான் நம்புகிறேன். அவன் சந்தோஷமாகவிருப்பான். நிச்சயம் அவன் அருகில் நாங்கள் சென்று தூங்கும்வரை... கட்டாயம் நாங்கள் அவனிடம் போகத்தானே வேண்டும்.’ என்று அந்தத் தாய் கூறுவது எனக்குக் கேட்பது போலிருந்தது.

என் மனம் உடலின் நிலையையும், உடல் மனதின் நிலையையும் பாதித்துக்கொண்டே இருந்தது. மாலைச்சூரியன் மூழ்கிக் கொண்டிருந்தான்.

‘எல்லாம் லேசுதான...’ அந்த அற்புதமான இசை... உடலை அசைக்கின்ற ‘கிற்றார்’ இசை என்னுள் மீண்டும் ரீங்காரமிட்டுக்கொண்டிருந்தன. எல்லோரும் அந்த வாலிபனிடமிருந்து விடைபெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் குதிரை வண்டில் காத்து நிற்கின்றது கம்பீரத்தோடு.

அந்த வெள்ளைக்காரன் மீண்டும் ராஜ நடை போட்டுக்கொண்டு திரும்பி குதிரை வண்டிலை நோக்கி முன்னேறுகின்றான். வண்டியில் ஏறி நின்று கொண்டு கழற்றிய தொப்பியைப் போட்டுக்கொண்டு கயிற்றைப் பிடித்தபடி நின்றுகொண்டிருந்தான். பின்புறமாக அழகிய நீண்ட வால்களை ஆட்டி ஆட்டிக்கொண்டு நின்ற குதிரைகள் அசைந்து சென்று வண்டிலோடு மறைந்து கொண்டிருந்தன.

‘தீடீ’ரென ஒரு அழுகுரல் விசும்பிக் கேட்டது. அந்த வாலிபனை பிரிய முடியாது மெல்லிழையாக இளம் பெண்ணின் குரல் ஒலித்துக்கொண்டிருந்தது. கறுப்பும் செந்நிறமும் கவிந்து கலக்கின்ற இருளில் கண்ணீர் அவளைக் கட்டியணைத்தபடி... வாழ்வில் காதல் என்பது ஒருமுறைதான் மலர முடியுமா? மங்கிய வானில் புள்ளிபோல் மிஞ்சி நின்ற வெள்ளியொன்று அதை மறுத்துக்கொண்டு நின்றது.

முகங்களின் தன்மைகள், கண்களின் பரிதவிப்புக்கள், புன்னகையின் மாறுதல்கள் எல்லாமே கரைந்துகொண்டிருக்கின்றன. புதைக்கப்பட்ட பிரேதங்களும், எலும்புகளை வைத்திருக்கின்ற செங்கற்களும், மரச்சட்டங்களும் மனதை உறுத்துகின்றன. மரணக் காட்சிகள் மறுபடியும் மனதில் விரிகின்றன.

அந்த வாழைக் குருத்தின் இறுதி ஊர்வலம் முடிந்துவிட்டது. வானம், காற்று,மழை, மனிதர்கள், பிரபஞ்சமே ஒரு கணம் நிர்ச்சலனமாகி விட்டதான பிரமை.

என் நிழல் பின்தொடர்கிறதா?

‘யாரின் நிழல் நாம்?’ என்பது மௌனியின் கேள்வி. வாழ்வு முடிவற்ற ஊர்வலங்களால் பின்னப்பட்டிருக்கிறதா?

மெதுவாய் நகரும் எனது ஊர்வலத்தில் நின்றுகொண்டிருக்கிறேனா?

நான் நடந்து கொண்டிருக்கிறேன்.

25.10.2005.

**நம்பிக்கை மூலை**

ஹௌகின் என்ற ஜென் ஞானியை காணவந்த நொபுஷிங்கே என்ற வீரன் ஒரு கேள்வி கேட்டான். உண்மையிலேயே சொர்க்கம், நரகம் எல்லாம் உண்டா? ஞானி கேட்டார், நீ யார்? நான் ஒரு ராணுவ வீரன். உன் முகத்தைப் பார்த்தால் பிச்சைக்காரன் போல இருக்கிறதே, உன்னை காவலுக்கு வைத்திருக்கும் முட்டாள் மன்னன் யார்?

நொபுஷிங்கே கோபத்துடன் உடைவாளில் கை பதித்தான். அடடே! கத்தி வேறு வைத்திருக்கிறாயா? வெண்ணெய் வெட்டவா? வாளை அவன் உருவியதுமே ஞானி சொன்னார். இதோ நரகத்தின் வாசல் திறக்கிறது.

சட்டென புரிந்தது வீரனுக்கு. குனிந்து வணங்கினான். ஞானி சொன்னார். இதோ சொர்க்கத்தின் வாசல் திறக்கிறது.

கோபமும், ஆணவமும் நரகம். தெளிவும் பணிவும் சொர்க்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தப் பிரச்சினைக்கு...

**சா**தாரண தலைவலி, காய்ச்சலுக்கு கூட அலறியடித்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடுகிற முன்ஜாக்கிரதை பேர்வழியா நீங்கள்? உடம்பு விஷயத்தில் எங்க வீட்டுல ரொம்ப கறார். லேசா தும்மல் போட்டா கூட உடனே டாக்டரைப் பார்த்துடுவோம் என நீங்கள் சொல்லிக் கொள்கிற விஷயம் பெருமைக்குரியதல்ல. உடலுக்குள் செல்கிற மருந்து, மாத்திரைகளும் அளவை மிஞ்சக் கூடாது. சில உபாதைகளுக்கு நமது உணவு பழக்கமே நல்ல மருந்தாக அமையும்.

**காய்ச்சல்:** காய்ச்சல் வந்தால் உடல் சக்தியை இழக்கும். கலோரி இழப்பு நிறைய இருக்கும் என்பதால் இதை ஈடுகட்ட நிறைய திரவ உணவுகள் குடிக்க வேண்டும். ஆப்பிள், சாத்துக்குடி மற்றும் மாதுளம்பழ ஜூஸ் நிறைய குடிக்கலாம். குளுக்கோஸ் தண்ணீர் குடிக்கலாம். இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை திரவ உணவு உட்கொள்ள வேண்டும். அரிசிக் கஞ்சி, பிரெட், திடமாகவோ, நீர்த்துப் போயோ இல்லாமல் இடைப்பட்ட நிலையிலிருக்கும் உணவுகள் போன்றவற்றை சாப்பிடலாம். நார்ச்சத்து நிறைந்த கீரை மாதிரி உணவுகள் தவிர்க்கப்பட வேண்டும். நார்ச்சத்து உணவுகளை உட்கொண்டால் காய்ச்சலால் ஏற்கனவே பலவீனமாகிப் போன உள்ளுறுப்புகளுக்கு அதிக வேலை கொடுத்த மாதிரி ஆகும். இதனால் களைப்பு இன்னும் அதிகமாகும். காரம், மசாலா நிறைந்த உணவுகளும் தவிர்க்கப்பட வேண்டும்.

**தலைவலி:** தலைவலிக்கிற போது பலமான உணவுகள் தவிர்க்கப்பட வேண்டும். சூடான பால், காபி அல்லது டீ குடிக்கலாம். டென்ஷனால் உண்டான தலைவலி என்றால் சிறிது நேரத்தில் சரியாகும். மூளை நரம்பில் ஏதேனும் கோளாறு இருந்தால் கூட தலைவலி வரும். வலி நிற்காத பட்சத்தில் மருத்துவரை அணுக வேண்டும்.

**ஜலதோஷம்:** சிட்ரிக அமிலம் உள்ள எலுமிச்சை, சாத்துக்குடி, தக்காளி போன்றவற்றை தவிர்க்கவும். திராட்சையும் கூடாது. மஞ்சள் வாழைப்பழம், பப்பாளி சாப்பிடலாம். குளிர்ந்த பொருட்கள் கூடவே கூடாது.

**வயிற்றுப் போக்கு:** வயிற்றுப் போக்கின் போது கார்போஹைட்ரேட் சத்து அதிகம் தேவைப்படும். வேக வைத்த ஆப்பிள், வாழைப்பழம், மாதுளம்பழம் சாப்பிடலாம். வெந்தயம் சாப்பிட்டால் அமிலத் தன்மையைக் குறைத்து மலம் கட்டும். ஜவ்வரிசிக் கஞ்சி, அரிசிக் கஞ்சி, மோர் சாதம், பிரெட் சாப்பிடலாம். எண்ணெய் பண்டங்கள், பால் மற்றும் பால் பொருட்கள், வெண்ணெய், நெய், இனிப்புகள், சமைக்காத உணவுகளைத் தவிர்க்கவும்.

**வயிற்றுவலி:** இதில் பலவகையான வலிகள் உண்டு.

செரிமானக் கோளாறால் உண்டான வலிக்கு சோடா, மோர், ஏரியேட்டட் பானங்கள் குடித்தால் சரியாகும். மாதவிலக்கின் போது உண்டான வலிக்கு குளிர்ச்சியான பழ ஜூஸ், குளிர்ந்த பால் அல்லது மோர் குடிக்கலாம். பட்டை, இலவங்கம் மாதிரி மசாலா அயிட்டங்கள், ஊறுகாய் தவிர்க்கப்பட வேண்டும்.

குடல்வால் பாதிக்கப்படுவதால் உண்டான வலி என்றால் வாந்தி இருக்கும். வலது பக்க வயிற்றின் அடிப்பகுதியில் தீவிர வலி இருக்கும். தொட்டாலே வலிக்கும். நிறைய திரவ உணவுகளை எடுத்துக் கொண்டு சீக்கிரமாக டாக்டரைப் பார்க்க வேண்டும்.

சிறுநீரகக்கல் காரணமாகவும் சிலருக்கு வயிற்று வலி வரும். இதற்கு வீட்டு வைத்தியம் எதுவுமில்லை. ஆனால் சிகிச்சைக்குப் பிறகு இவர்கள் பால் பொருட்கள், தக்காளி, சாக்லேட், எலும்பு சூப் போன்வற்றை தவிர்ப்பது நல்லது.

**மலச்சிக்கல்:** உணவில் நிறைய காய், கீரை, பழங்கள் சேர்த்துக் கொண்டாலே இப்பிரச்சினை வராது.

முதல் நாள் இரவு ஒரு டேபிள் ஸ்பூன் வெந்தயத்தை ஊற வைத்து மறுநாள் காலை சாப்பிடலாம். அதே மாதிரி தினம் இரவு படுக்கும் முன்பாக கொய்யாக்காய் ஒன்று சாப்பிடலாம். வெதுவெதுப்பான தண்ணீரில் எலுமிச்சை சாறும் தேனும் கலந்து காலையில் குடிக்கலாம். பொடியாக நறுக்கிற முட்டை கோசில் கொஞ்சம் எலுமிச்சை சாறும் தேனும் கலந்து காலையில் முதலில் எடுத்துக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட அடுத்த அரை மணி நேரத்தில் மலச்சிக்கல் சரியாகும்.

**உயர் ரத்த அழுத்தம்:** எண்ணெய் பண்டங்கள், உப்பு, ஊறுகாய் போன்றவற்றை கட்டாயம் தவிர்க்க வேண்டும். எல்லாவித காய், கீரை, பழங்களும் சேர்த்துக் கொள்ளலாம். மட்டன், மாட்டுக்கறி தவிர்க்கவும். சிக்கன் மற்றும் மீனில் எண்ணெய் இல்லாமல் குழம்பு வைத்து சாப்பிடலாம்.

**குறைந்த ரத்த அழுத்தம்:** குறைந்த ரத்த அழுத்தம் காரணமாக மயக்கம் வந்தால் உடனே ஒரு டம்ளர் மோரில் உப்பு கொஞ்சம் அதிகம் போட்டுக் குடிக்க வேண்டும். ஆரோக்கியமான உணவுப் பழக்கம் இப்பிரச்சினை உள்ளவர்களுக்கு அவசியம்.

**நீரிழிவு:** மருத்தவரின் பரிந்துரையின் பேரில்தான் இவர்களது உணவுப்பழக்கம் அமைய வேண்டும். இனிப்பு கலந்த உணவுகள், நெய், வெண்ணெய், அதிக எண்ணெய் தவிர்க்கப்பட வேண்டும். சூரியகாந்தி எண்ணெய், நல்லெண்ணெய் அல்லது ஆலிவ் எண்ணெயில் சமைத்து சாப்பிடலாம். ஆப்பிள், கொய்யா, பப்பாளி, மாதுளை தவிர மற்ற பழங்கள் வேண்டாம். நார்ச்சத்து அதிகமுள்ள கம்பு, கேழ்வரகு, கோதுமை, சோளம் அதிகம் சேர்த்துக் கொள்ளலாம். சர்க்கரையின் அளவு திடீரென குறைகிற ஹைப்போகிளைசினிக் என்கிற நிலை காரணமாக சிலருக்கு மயக்கம் வரும். நீரிழிவு நோயாளிகள் எப்போதும் கையில் சாக்லேட்டோ, இனிப்போ வைத்திருக்க வேண்டும். சர்க்கரை குறைந்து மயக்கம் வரும்போது உடனே அதை சாப்பிடலாம். குளுக்கோஸ் தண்ணீர் அல்லது சர்க்கரை சேர்ந்த பழஜூஸ் குடிப்பதும் ஆபத்திலிருந்து காக்கும்.

**கர்ப்ப கால வாந்தி:** மாதுளம்பழ ஜூஸில் தேன் கலந்து வைத்துக் கொண்டு ஒவ்வொரு வேளை சாப்பாட்டுக்கு அரை மணி நேரம் முன்பும், ஒரு சின்ன கப் அளவு குடிக்கலாம்.

தாய்ப்பால் சுரப்புக்கு: கால்சியம், புரோட்டின், மக்னீசியம் சத்துக்கள் பாலூட்டும் பெண்களுக்கு அதிகம் தேவை. பால், பால்பொருட்கள், கடல் உணவுகள், பச்சை வேர்க்கடலை, பூண்டு, சுண்டைக்காய், தாமரைத்தண்டு போன்றவற்றை உணவில் அதிகம் சேர்த்துக் கொண்டால் தாய்ப்பால் சுரப்பு அதிகமாகும். ஒவ்வொரு முறையும் பாலூட்டுவதற்கு முன் ஒரு சொம்பு தண்ணீர் குடிப்பது நல்லது.

டயட்டீஷியன் அம்பிகா சேகர்.



**லண்டன் லூரசியத்தில் கடந்த 15 வருடங்களாக வழிபாட்டு மண்டபமாக இருந்துவந்த சிவன் கோவிலை ஆன்மீக முறைப்படி அமைக்க அனுமதிப் பெறப்பட்டுள்ளது என்று அறிகிறோம். லண்டனில் முறையான சிவன் ஆலயமே இல்லை. முதன்முதலாக அமைக்கப்படும் சிவன் கோவிலை நல்ல முறையில் அமைப்பது ஆலய பரிபாலன சபையின் பொறுப்பு. லண்டனில் எந்த ஒரு கோவிலும் முறையாக அமைக்கப்படவில்லை என்பது கசப்பான உண்மை. ஆகவே இந்த சிவன் கோவிலை அமைப்பதற்கு முன்னர் ஆலய அறங்காவலர்கள் தமிழ்நாட்டுக்குச் சென்று பழம்பெருமை பெற்ற கோவில்களைப்பார்த்து ஆகம முறையில் அமைக்கப்பட வேண்டும் என்பது தமிழர் தகவலின் வேண்டுகோள்.**

### டிப்ஸ்

**பு**திதாக வாங்கும் செருப்பும் பூட்சும் காலைக் கடிக்காமல் இருக்க... அதன் உட்புறம் புளித்த தயிரை இரவில் தடவுங்கள். காலையில் துடைத்துவிட்டால் தோல் மிருது வாகிவிடும்.

**பு**த்தம் புது ஜீன்சை முதல் தடவையாக துவைக்கப் போகிறீர்களா? 5 லிட்டர் தண்ணீரில் 4 டேபிள்ஸ்பூன் வினிகர் கலந்து ஜீன்சை 30 நிமிடம் அதில் ஊற வையுங்கள். பிறகு வழக்கம் போல் துவைத்தால் ஜீன்சின் புதுக்கருக்கு மாறாமல் வெகு நாட்களுக்கு அப்படியே ஜொலிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆவணி மாதப்பலன் (ஆகஸ்ட் 15 - செப்டெம்பர் 15)

– கணித்தவர் : ஜோதிட ரத்னா – லயன். டாக்டர். கே.பி. வித்யாதரன்
37, மகாலக்ஷ்மி தெரு, தி.நகர், சென்னை – 17. தொலைபேசி : 2434 8877, 24336465

**மேடம்** கற்பனைவாதிகளே! இந்த மாதத்தின் முற்பகுதியில் காரியங்கள் கைகூடும். வீட்டில் சுபகாரியங்கள் ஏற்பாடாகும். குடும்பத்தாரின் ஆதரவு கிட்டும். பிள்ளைகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள். சகோதர வகையில் கொஞ்சம் அலைச்சல் இருந்தாலும் ஆதாயம் உண்டு. மாதப் பிற்பகுதியில் உடல்நலம் பாதிக்கும். திடீர் பயணங்கள் வீண் செலவு வைக்கும். வாகனம் பழுதாகும். வியாபாரத்தில் சுமுகமான லாபம் உண்டு. போட்டிகள் இருக்கும். உத்யோகத்தில் தனிநபர் விமர்சனம் வேண்டாம். மிதமான மாதமிது.

**இடபம்** அமைதியானவர்களே! காரியத் தடைகள் விலகும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். பிள்ளைகளின் வெகுநாள் ஆசைகளை பூர்த்தி செய்வீர்கள். பழைய கடன் ஒன்றை பைசல் செய்வீர்கள். உடன்பிறந்தவர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் மறைமுகமாக செயல்பட்டவர்களை ஒதுக்கித்தள்ளுவீர்கள். உத்யோகத்தில் பதவி உயரும். புது சலுகைகள் கிடைக்கும். உற்சாகமான மாதமிது.

**மிதுனம்** மனதில் பட்டதை பளிச்சென்று பேசுபவர்களே! எதிர்பாராத பணவரவு உண்டு. குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடக்கும். புது நகை வாங்குவீர்கள். பழைய கடன் தீரும். வாகனத் தொல்லை நீங்கும். வி.ஐ.பிகள் அறிமுகமாவார்கள். பிள்ளைகளின் நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். கௌரவப் பதவிகள் தேடி வரும்.வியாபாரத்தில் தன லாபம் உண்டு. புது ஏஜென்சி எடுப்பீர்கள். உத்யோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். சாதிக்கும் மாதமிது.

**கடகம்** திறமைசாலிகளே! இந்த மாதத்தின் முற்பகுதியில் அலைச்சல் இருந்தாலும் அதற்கான பலனை பிற்பகுதியில் பெறுவீர்கள். குடும்பத்தாரின் ஆலோசனைகளை ஏற்பீர்கள். பணம் வரும். திடீர் செலவுகளும் இருக்கும். உறவினர்களைச் சந்தித்து உதவி கேட்பீர்கள். வியாபாரத்தில் பாக்கிகளை வசூலிப்பதில் கறாராக இருங்கள். உத்யோகத்தில் தேங்கிக் கிடந்த பணிகளை முடிப்பதில் ஆர்வம் காட்டுங்கள். முன்கோபம் வரும். சிந்தித்து செயல்படும் மாதமிது.

**சிம்மம்** அதிகம் யோசிப்பவர்களே! தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பிள்ளைகளின் உடல்நலத்தில் கொஞ்சம் கவனம் செலுத்துங்கள். பெற்றோரின் ஆதரவு கிடைக்கும். வீட்டிற்குத் தேவையானப் பொருட்களை வாங்குவீர்கள். ஷேர்,லாட்டரி மூலம் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிப்பீர்கள். உத்யோகத்தில் புது வேலை கிடைக்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள். மனநிம்மதி கிட்டும் மாதமிது.

**கன்னி** கடின உழைப்பாளிகளே! இந்த மாதத்தில் கொஞ்சம் காரியங்கள் இழுபறியாக இருந்தாலும் முழுமூச்சுடன் முடித்துக் காட்டுவீர்கள். விரையச்செலவுகளும், மன உளைச்சலும் வந்துபோகும். பிள்ளைகளால் உறவினர்கள் மத்தியில் பெருமையடைவீர்கள். சுபகாரிய பேச்சு வார்த்தைகள் முன்னேற்றம் தரும். வியாபாரத்தில் புது முதலீடுகளை தவிர்க்கவும். உத்யோகத்தில் மறைமுகமாக செயல்பட்டவர்களை ஒதுக்குவீர்கள். பொறுத்திருந்து சாதிக்கும் மாதமிது.

**துலாம்** வெள்ளையுள்ளம் கொண்டவர்களே! உடல்நலத்தில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். குடும்பத்தில் சிறுசிறு வாக்குவாதங்கள் வந்தாலும் ஒற்றுமை பாதிக்காது. எதிர்பார்த்த பணம் கைக்கு வந்துசேரும். உடன்பிறந்தவர்களின் ஆதரவு உண்டு. வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி கிட்டும். தாய்வழி உறவினர்களால் மனக்கசப்புகள் வரும். வியாபாரத்தில் பக்குவமாக செயல்படுங்கள். உத்யோகத்தில் வேலைசுமை அதிகரிக்கும். தாழ்வுமனப்பான்மை விலகும் மாதமிது.

**விருச்சிகம்** தாராள மனம் படைத்தவர்களே! புது முயற்சிகள் வெற்றியடையும். குடும்பத்தில் உங்களின் ஆலோசனைகளை ஏற்பார்கள். கடன்பிரச்சனைகளுக்கு புதுவழி பிறக்கும். பிள்ளைகளின் உடல்நலம் திருப்தி தரும். உடன்பிறந்தவர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். முன்கோபம், வீண் செலவுகள் குறையும். வியாபாரத்தில் போட்டிகளை முறியடிப்பீர்கள். கொடுக்கல் வாங்கல் சுமுகமாக இருக்கும். உத்யோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். ஏற்றம் நிறைந்த மாதமிது.

**தனுசு** கூடிவாழும் குணமுடையவர்களே! ஆடம்பரச் செலவுகளை குறைப்பீர்கள். குடும்பத்தில் உங்கள் பேச்சுக்கு மதிப்பு கூடும். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். தள்ளிப்போன காரியங்கள் உடனே முடியும். தாராளமாக பணம் வரும். வி.ஐ.பிகள் உதவுவார்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பு தருவார்கள். புது ஏஜென்ஸி எடுப்பீர்கள். உத்யோகத்தில் உங்களின் திறமை வெளிப்படும். தடைகள் உடைபடும் மாதமிது.

**மகரம்** எதிரிக்கும் உதவுபவர்களே! அஷ்டமத்துச் சனி தொடர்ந்து நடப்பதால் கொஞ்சம் கவனமாக செயல்படப்பாருங்கள். உடல்நலம் பாதிக்கும். குடும்பத்தில் சின்ன சின்ன சண்டை சச்சரவுகள் வந்துபோகும். பிள்ளைகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற கையிருப்பை கரைப்பீர்கள். சகோதர வகையில் கொஞ்சம் அலைச்சல் இருக்கத்தான் செய்யும். வியாபரத்தில் மறைமுகப் போட்டிகளை சமாளிப்பீர்கள். பெரிய முதலீடுகள் வேண்டாம். உத்யோகத்தில் உங்களை குறைகூறுவார்கள். நாவடக்கம் தேவைப்படும் மாதமிது.

**கும்பம்** எளிமையை விரும்புபவர்களே! இந்த மாத்தில் வீண் அலைச்சலும், விரையச்செலவுகளும் இருக்கத்தான் செய்யும். சில காரியங்கள் முடிவதைப் போல இருந்தாலும் இழுபறியாகவே இருக்கும். குடும்பத்தாருடன் மனம் விட்டுப் பேசுங்கள். தலைவலி, நெஞ்சுவலி வரும். உறவினர்களிடையே மனக்கசப்பு வெடிக்கும். வியாபாரத்தில் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். உத்யோகத்தில் மேலதிகாரியை பகைத்துக் கொள்ள வேண்டாம். பொறுமை தேவைப்படும் மாதமிது.

**மீனம்** திறமைசாலிகளே! இந்த மாதத்தின் முற்பகுதி கொஞ்சம் மந்தமாக இருந்தாலும் பிற்பகுதி பரபரப்பாக அமையும். குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். கையில் காசுபணம் புரளும் என்றாலும் கொஞ்சம் செலவுகளை குறையுங்கள். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். வியாபாரத்தில் வரவேண்டிய பாக்கிகளை நயமாகப் பேசி வசூலியுங்கள். உத்யோகத்தில் மேலதிகாரியுடன் சுமுகமான நட்புறவு ஏற்படும். தடைகளை தாண்டி வெற்றி பெறும் மாதமிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணக் கட்டுரை – 3



திருச்சியில் இருந்து மதுரைக்கு 130 கி.மீட்டர். இத்தூரத்தை 1.20 பைசா கொடுத்து அன்று பேருந்தில் சென்றுவிடலாம். இன்று மதுரைக்கு சென்றால் அதே சுற்றுலா மாளிகையில் தங்கலாம். அந்நாளில் College House பெயர்போன ஒரு தங்கும் வசதியுடன் கூடிய உணவகமாகும். அந்நாளில் College House-ல் தங்கும் உணர்வு ஒரு புது அனுபவமாகும். அதற்கான செலவு ரூ 3.50 மட்டுமே. நான் முதல் முதலில் மதுரையை பார்த்த போது மதுரையில் வீடுகள் எல்லாம் மலிவு விலையில் உள்ளன என கூறுவார்கள். அதற்கான காரணம் முருகனின் ஆறு படைவீடுகளில் மூன்று படைவீடுகள் அங்கு அமைந்து இருந்தது. பின்னர் மதுரை மாவட்டம் பிரிக்கப்பட்டு திண்டுக்கல் ஆனபின் 'பழனிமலை' பிரிந்துவிட்டது.

மதுரையில் பார்க்க வேண்டிய இடங்கள் பல உள்ளன. அவற்றில் நான் கண்டவை முருகனின் ஆறு படைவீடுகளில் முதல் படைவீடான திருப்பரங்குன்றம், பழமுதிர்சோலை, மீனாட்சிஅம்மன் கோயில், அழகர்கோயில், திருமலைநாயக்கர் மஹால், வைகை அணை முதலியன. இவைகளை காண ஒரு நாள் போதாது.

மதுரையில் இருந்து 6 கி.மீ தூரத்தில் உள்ளது 'திருப்பரங்குன்றம்'. அந்நாளில் குதிரை வண்டியில் போகலாம். முச்சக்கர வண்டி (ஆட்டோ) ஒன்று கூடகாண முடியாத காலம் அது. அங்கு உள்ள முருகப்பெருமான் கோயில் குன்றினை குடைந்து உச்சியில் உள்ளது. முருக பெருமான் தெய்வானையுடன், இணைந்து அருள் வழங்குகிறார். இங்கு சிவனும், பெருமாளும் தனித் தனியாக அருள்பாலிக்கின்றனர். நான் கண்ட திருபரங்குன்றத்ததை, முருகபெருமான் அழகை சற்று விரிவாக கூற நினைக்கும் போதே மனம் இனிக்கின்றது.

முருகப் பெருமானே பிரணவமந்திர சொரூபமாக இருந்த போதிலும், சிவபெருமானும் முருகப் பெருமானும் உண்மையில் ஒருவராக இருந்த போதிலும், உலக நியதிக்குப் புறம்பான காரியத்தைச் செய்ததால், அக்குற்றத்திற்குப் பரிகாரம் செய்து நீதியை நிலை நிறுத்த வேண்டிக் குமரமூர்த்தி திருப்பரங்குன்றத்திற்கு வந்து தவம் செய்யலானார். அப்போது சிவனும் பார்வதியும் காட்சியருளி, பரங்கிரிநாதர் ஆவுடைய நாயகி எனப் பெயர்பெற்றனர். முருகனால் வழிபடப்பட்ட பரங்கிரிநாதர் ஆவுடைய நாயகி கோயில், தற்போது மீனாட்சிசுந்தரேஸ்வரர் ஆலயம் என்னும் பெயரில் அமைந்துள்ளது. இவர்களை தரிசனம் செய்த பின் தான் முருகபெருமானை தரிசிக்க செல்ல வேண்டும்மென்பது ஐதீகமாக சொல்லப்படுகின்றது.

முருகப்பெருமானுக்கு சிவபெருமான் காட்சியருளிய நாள் தைப்பூசம் நன்னாள் என்றும் இந்நாளில் சிவபெருமானையும் முருகபெருமானையும் வழிபடுபவர்களுக்கு நினைத்த காரியம் நடைபெறும் என்றும் கூறுவார்கள்.

சூரபத்மன் முதலிய அசுரர்களை அழித்துத் தேவர்களின் துயர் துடைத்ததற்கு நன்றி செலுத்தும் வகையில் இந்திரன் தன் புதல்வியாகிய தெய்வானைதேவியை முருகப்பெருமானுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பினார், அத்திருமணம் திருப்பரங்குன்றத்தில் நடைபெற்றது என கூறுவார்கள்.

குமரப்பெருமான் தெய்வானைதேவியை திருமணம் செய்த நாள் பங்குனி உத்திர நாள் எனக் கருதப்பட்டு இங்கு இவ்விழாவை சிறப்பாக நடத்துகின்றனர். இங்கு முருகப்பெருமான் ஆலயத்தின் கர்ப்பக்கிரஹத்தில் இறைவன் வள்ளிஅம்மன் இன்றித் தெய்வானை அம்மனுடன் மட்டுமே காட்சியளிக்கின்றார். அத்துடன் நாரதர் முனிவரும் இங்கு முருகப் பெருமானை வழிபட்டு




லண்டனில் தரமான தங்கத்துக்கு தாரணி ஜுவல்லர்ஸ் – வெம்பிளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் விளம்பர உறுதுணையாளர்களை ஆதரியுங்கள்

ஐரோப்பிய, மத்திய கிழக்கு நாடுகளில்
24 மணி நேரமும் ஒளிரும் தமிழ் தொலைக்காட்சி

**DEEPAM TV**
EAST WEST BROADCAST LTD
UNIT 1, EBURY BUSINESS CENTRE
161-163, STAINES ROAD
HOUNSLOW, MIDDLESEX TW3 3JB, U.K.

செய்திகள் காலைக்கதிர் சின்னத்திரை தொடர்கள்
அரசியல் ஆய்வு விவரணங்கள்
மகளிர் – சிறுவர் நிகழ்ச்சிகள் நீங்களும்
நாங்களும் இணையும் பல நிகழ்ச்சிகள்
இசை நடன நிகழ்ச்சிகள்
புத்தம் புதிய திரைப்படங்கள்

Tel : +44 (0) 208 8146565
Fax : +44 (0) 208 8141144
Email : info@deepamtv.tv
Web : www.deepamtv.tv

உங்களுக்குத் தேவையான சகல விதமான
மளிகைப் பொருட்கள், இலங்கையிலும்,
இந்தியாவிலும் இருந்து இறக்குமதி செய்யப்பட்டம
உணவுப்பொருட்கள், கடல் உணவு வகைகள், மரக்கறி வகைகள்,
பழ வகைகள், மேல்நாட்டு குடிவகைகளுடன் இலங்கை பியர்
வகைகளையும் சகாய விலையில் பெற்றுக்கொள்ள
ஒரே இடம். ஆடியோ, வீடியோ,
சீ.டி, வி.சீ.டி ஆகியவற்றை விற்பனைக்கும்
வாடகைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

# CHANDRA
Super Market &
Off Licence

COST CUTTER

Tel : 020 8333 8680

209 - 211 Bromley Road
Catford
London SE6 2PG

புதிய பொலிவுடன் லூசியத்தில்

# கற்பகம்

சகலவிதமான மரக்கறி வகைகள், பழவகைகள் உட்பட சகல
தேவைகளுக்கும் நாடவேண்டிய ஒரே இடம்

# KATPAGAM



36, Loampit Hill Lewisham
London SE 13 7SW
Tel : 0795763 9738
Fax : 020 8311 9304



துரித பணமாற்றுச் சேவை
ரஞ்சன்
இலண்டன்

# AMBAAL
Jewellers

176 Upper Tooting Road
London SW17 7ER
Tel : 020 8672 9955
Fax : 020 8672 7097



784 London Road
Thornton Heath
Surrey CR4 6JB
Tel : 020 8689 8293
Fax : 020 8684 0323



# Anthoorium
*World of Designs*
Jewellery & Textiles

For your Jewels, Gems, Sarees,
Costumes, Musical Instruments & Gift Items
please visit us...

வைரத்தாலிக்கொடி அத்துடன்
பழைய தங்கத்தில்
புதிய டிசைன் நகைகள் செய்து கொள்ள நாடுங்கள்...
இத்துடன் வாத்தியகருவிகளும்
விற்பனைக்கு உண்டு

102, B Burlington Road
New Malden, Surrey KT3 4NT
Tel : 020 8942 8001 Fax : 020 8942 8007
Web : www.anthoorium.co.uk
Email : sales anthoorium.co.uk

# ARM ASSOCIATES
*For all types of insurance*

P. SRINIVASAN (CertPFS)
and
SUHAN SRINIVASAN (DipPFS, Economics BSc)

We have been helping our client to find competitive and quality policies for over 35 years. How have we been able to stay in the insurance business for so long? Well that is quite simple. We understand our clients and provide them with the personal service they need.

- ✓ We deal with all types of insurance under one roof
- ✓ There are no proposal forms to complete
- ✓ Quotations and cover provided over the phone
- ✓ We are able to offer exclusive rates
- ✓ We also offer Independent financial advice on:

Pensions
- Mortgages | Life cover
- Investments | Savings
- Inheritance Tax Planning

ARM Associates is the one stop of all your financial needs

Tel : 020 8763 2221 Fax : 020 8763 2220
32 Abbots Lane, Kenley, Surrey, CR8 5JH
Email : sri@srinivasan.co.uk Web : www.srinivasan.co.uk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உபதேசம் பெற்றார் என்றும் கூறப்படுகின்றது. ஆகையால் நாரதர் சூரிய சந்திரன் முதலானவர்களுடன் காட்சியளிக்கின்றார். முருகப்பெருமான் மணக் கோலத்தில் மணவாளப் பெருமானாக அருள்பாலிப்பதால் திருமணத்திற்கு விருந்து சிறப்பு என்பதைப் போன்று இந்த தலத்தில் அன்னதானம் செய்தால் நோய்களெல்லாம் தீர்வதோடு, மக்கட் செல்வமும் இறவைன் அருளுவான் என்பது நம்பிக்கை தெய்வானைஅம்மனுடன் கூடிய குமரப் பெருமானை நினைத்து வணங்கினால், நம் வறுமையைப் போக்கி வளமெல்லாம் தருவான் என்பது உண்மையாகும்.

இக்குன்றின் வடபாகத்தில் முருகப்பெருமானது ஆலயம் அமைந்துள்ளது. கோபுர வாசலுக்கு முன்னால் அந்தரபாண்டியன் மண்டபம் என அழைக்கப்படும் ஆஸ்தான மண்டபம் காணப்படுகிறது. சுமார் 66 துாண்கள் நுண்ணிய வேலைப்பாடுகளுடன் அமைந்துள்ளது. யாளிகள், குதிரை வீரர்கள், சிவபெருமானின் திரிபுரதகனக்கோலம் முதலிய சிற்பங்கள் அலங்கரிக்கிறது. மேலும் இம்மண்டபத்தின் மையத்தில் அமைந்துள்ள தூண்களில் நர்த்தன விநாயகர், துர்க்கையம்மன், தெய்வானை, வீரவாகுதேவர் முதலிய பல எழில் மிகுந்த சிற்பங்கள் காணப்படுகின்றன. தெய்வானை திருமணக் காட்சியை விளக்கும் சிறப்பு மிக்க சிற்பங்கள் மிகவும் அற்புதமானது.

பிரம்மா ஹோமம் வளர்த்து விவாகச் சடங்குகள் இயற்ற, இந்திரன் தாரை வார்க்க, முருகப்பெருமானை தெய்வானை கைத்தலம் பற்றும் திருக்கோலத்தில் ஒவ்வொரு திருவுருவமும் வெளிப்படுத்தும் மகிழ்ச்சி, நாணம், பெருமிதம் ஆகிய உணர்ச்சி பாவங்களை வெளிப்படுத்தும் கலை நயம் மிக்க சிற்பங்கள் நெஞ்சை விட்டு என்றென்றும் அகலாத தன்மையுடையன. இம்மண்டபத்தினையடுத்து ஏழு நிலைகள் கொண்ட ராஜகோபுரமும், கல்யாணமண்டபமும் உள்ளன.

கல்யாணமண்டபத்தின் கிழக்குப் பாகத்தில் லெஷ்மி தீர்த்தம் உள்ளது. இக்கரையில் விநாயகனை வணங்கி அத்தீர்த்ததில் உப்பு, மிளகு முதலிய பொருள்களை போட்டால் நோய்கள் நீங்குவதாக கூறுவார்கள்.

கல்யாணமண்டபத்திற்கு அடுத்துள்ள கொடிமர மண்டபத்திற்குப் படிகள் வழியாக ஏறி மேலே செல்லவேண்டும். கொடிமரத்திற்குப் முன்பாக மயில், நந்தி, மூஷிகம் ஆகிய மூன்று வாகனங்களும் ஒருங்கே அமைந்துள்ளது. இத்தலத்தின் சிறப்பாகும்.

மகாமண்டபத்தில் சோமாஸ்கந்தர், நடராஜர், சண்டிகேஸ்வரர், நவவீரர்கள், தஷிணாமூர்த்தி, பைரவர், சந்திரன், சாயாதேவி, சமிராதேவி சமேதசூரியன் சந்நிதிகள் உள்ளன. மகாமண்டபத்தின் கீழ்ப்பாத்தில் வள்ளி, தெய்வானை ஆறுமுகன், அருணகிரிநாதன், பஞ்சலிங்கம், ஜ்வரதேவர் நவக்கிரகங்கள் இல்லாமல் தனித்துள்ள சனிஸ்வரர், இம்மண்டபத்திற்கு மேல்பாகத்தில் கோவர்தனாம்பிகை தனிக் கோயில் கொண்டுள்ளனர்.

மகாமண்டபத்தில் மலையைக் குடைந்து உருவாக்க பெற்று கர்ப்பக்கிரஹத்தில் மூலவரான முருகன் திருமணக்கோலமும், மேற்குப் பகுதியில் தாமரை மலரின் மீது அமர்ந்து கரங்களில் கரும்பும், கனியும் ஏந்திப் பூதகணங்கள் சூழக்காட்சியருளும் வகையில், மூலவராகிய முருகப்பெருமானின் சந்நிதிக்கருகே மலையைக் குடைந்து வடிவமைக்கப்பட்டுள்ளது. கோயிலில் பவளக்கனிவாய்ப் பெருமான் மகாலெஷ்மியுடனும் மாங்கமுனிவருடனும் காட்சியருளுகின்றார்.

இக்கோயில் வெளிப்புறச் சுவரில் ஆதிசேஷன் மீது பாற்கடலில் அமர்ந்திருக்கும் பெருமான், வராஹமூர்த்தி, நரசிம்மமூர்த்தி ஆகியவர்களின் அர்த்தசித்திர உருவங்கள் அமைந்துள்ளது. இக்கோயிலின் உட்புறச் சுவரில் சோமாஸ்கந்தர் உருவமும், வெளிப்புறச் சுவரில் கோபூஜை புரியும் பார்வதி, சந்தியா தாண்டவமாடும் சிவபெருமான் திருவடிவங்களும் அமைந்துள்ளது. தெய்வங்கள் முறையிலேயே ஒரே கர்ப்பக்கிரஹத்தில் பாறையைக் குடைந்து அமைந்திருக்கின்றனர்.

மணக்கோலம் கொண்ட பெருமானோ உயர்ந்த இடத்தில் எல்லா தெய்வங்களும் சூழ இருக்கிறார். தானென்ற ஆணவம் அகன்று கருத்துக்கு ஏற்ப வெவ்வேறு உருவங்களில் திகழும் தெய்வங்கள் அனைத்தும் ஒன்றே என்ற சமரச மனப்பான்மையும் தோன்றுமானால், இறைவன் அருளால் உயர்நிலை அடையலாம் என்பதையே எம்பெருமான் தெய்வானை அம்மன் திருமணம் மூலமாகவும், தனது முதற்படை வீடு ஆலய அமைப்பு மூலமாகவும் அறிவிக்கின்றார் என்று கொள்ளலாம்.

நான் கண்ட முருகபெருமானின் முதல்படை வீட்டைப்பற்றி தான் பயணத்தின் மூலம் அறிந்த செய்திகளை பகிர்ந்து கொண்டேன். தொடர்வது பழமுதிர் சோலை (அழகர்கோயில்)...

-தொடரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடகர்களுக்கு இனிய குரல் வளத்தைத் தரும் அன்னாசிப் பழம்

## மட்டன் செரிமானம் ஆக உதவும் பழம் !

அன்னாசிப்பழம், வெப்பப் பிரதேசங்களில் அதிகம் வளரும் செடி இரகமாகும். நறுமணமும் இனிய வாசனையும், சதைப்பற்றும் இனிய சுவையும் கொண்ட பழம் அன்னாசி. இதனால்தான் இந்தப் பழத்தின் துண்டுகளையும், சாற்றையும் பச்சடி வகைகள், இரசம், கேக்குகள், ஐஸ்கிரீம் முதலியவற்றில் சேர்க்கின்றனர். ஆட்டிறைச்சி, பன்றி இறைச்சி முதலிய துண்டுகளை அலங்காரம் செய்து விற்க, அயல்நாடுகளில், இரண்டு அன்னாசிப்பழத் துண்டுகளையே இறைச்சியின் இரு பக்கங்களிலும் வைத்து, ஸான்ட்விச் போல் தருகின்றனர். இதற்கு உண்மையில் இன்னொரு காரணமும் உண்டு.

உணவில் இறைச்சியையும் சேர்த்துச் சாப்பிட்டால் அது உடனே ஜீரணமாக வேண்டும். உணவு எளிதில் ஜீரணமாக உருளைக் கிழங்கை ஆட்டுக்கறி போன்ற மட்டன் வகைகளுடன் சேர்த்தே பரிமாறுகிறோம். ஆனால் அயல்நாடுகளில் அப்படி அன்று இறைச்சி உணவுடன் சாப்பிட இரு அன்னாசிப்பழத் துண்டுகள் கொடுக்கப்படுகின்றன.

உண்ணத்தக்க 100 கிராம் அன்னாசிப்பழத்தில் ஈரப்பதம் 88%, புரதம் 0.6%, மாவுச்சத்து 10.8%, கொழுப்பு 0.1% மற்றும் நார்ச்சத்து, தாது உப்புக்கள் என்னும் கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச்சத்து, கரோட்டின், தயாமின் போன்றவைகள் உள்ளன. வைட்டமின் 'சி' யும் 63 மில்லி கிராம் அளவு இருக்கிறது.

அன்னாசிப்பழத்தில் புரோமெலின் என்னும் செரிமானப்பொருள் இருக்கிறது. அது உணவில் உள்ள சத்துப் பொருள்களை உடனடியாகச் செரிக்கப் பண்ணிவிடுகிறது. பழச்சாறாய் அருந்தினால் விரைந்து சாப்பிட்ட உணவு ஜீரணமாகும்.

## இரசமாய் அருந்துங்கள்!

உடல் பலவீனமானவர்கள் நோயாளிகள் உடல் நன்கு தேறி பலத்துடன் விளங்க, இப்பழச்சாற்றுடன் தேனையும் கலந்து களைப்பு நீக்கும் காபி, தேநீர் போல் அருந்த வேண்டும். தேன் சேர்க்கப்பட்ட அன்னாசிப்பழச்சாறு மிக உயர்தரமான சத்துணவாகும்.

நன்கு பழுத்த அன்னாசியின் சாறு, சிறுநீர்க்கழிவினைத் தூண்டுகிற அரிய மருந்துப் பொருளாய்ச் செயல்படுகிறது. குடலில் உள்ள புழுக்களை அழித்துவிடுகிறது. பித்த நீரை வெளியேற்றித் தேகத்துக்கு ஆரோக்கியம் அளிக்கிறது.

அன்னாசியால் இரத்த சோகை, மஞ்சள் காமாலை, அடிவயிற்றுக் கோளாறுகள், வயிற்று வலி முதலியவை குணமாகின்றன. முக்கியமாக இதயம் நன்கு வேலை செய்ய அன்னாசி பயன்படுகிறது. இதில் உள்ள பழச் சர்க்கரையும், சிட்ரிக் அமிலமும், மாலிக் அமிலமும் தேக ஆரோக்கியத்துக்கு நன்மையளிக்கின்றன.

## பாடகர்களுக்கான பழ இரசம் !

நல்ல குரல் வளம் பெறவும், நாத இதழ்களில் ஏற்படும் கோளாறுகள், தொண்டைப் புண், முதலியவை அகலவும், அன்னாசிப்பழச்சாறு

We Specialise in
For all your needs in immigration
(All aspects upto house of lords)
Commercial & Residential
Conveyancing, Employment,
Civil Litigation, Consumer Problems,
Lastwill, Power of Attorney,
SponsorshipDeclaration
HSMP, Workpermits

மீண்டும் Tamil House-இல் மார்க்கண்டன் Solicitors
MARKENDAN & UDDIN Solicitors
Solicitors & Administrators for Oaths
Tamil House, 720 Romford Road,London E12 6BT
Tel : 020 8514 8300, 07830 285 634 Fax : 020 8514 8381
Email : info@msssolicitors.com
Mr. Markandan : 07956 386 578 Mr. Uddin : 07957 455 670

லண்டனில் தரமான தங்கத்துக்கு தாரணி ஜுவல்லர்ஸ் – வெம்பிளி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பயன்படுகிறது. தொண்டைக்குள் வளரும் சதை நாளடைவில் அகன்றுவிடுகிறது.

அன்னாசியில் உள்ள குளோரின் சிறுநீரகங்கள் சிறப்பாக இயங்கத் தூண்டிக் கொண்டே இருக்கின்றது. அதனால் உடலில் உள்ள விஷப் பொருள்களும் உடனுக்குடன் சிறுநீர் மூலம் வெளியேறி, உடல் ஆரோக்கியம் புதுப் பிக்கப்படுகிறது. அது மட்டுமன்று, தோலுக்கு அடியில் உள்ள அழுக்குகளையும் இப்பழச்சாறு உறிஞ்சி வெளியேற்றி விடுகிறது என்கிறது ஆயுர்வேதம்.

தொண்டை அழற்சி நோய் உள்ளவர்கள் இப் பழச்சாற்றால் வாய் கொப்பளிக்கலாம். முதல் நாள் தொண்டையில் வளர்ந்து இறந்துவிட்ட சவ்வுகள் அன்னாசி இரசத்தினால் வெளியேறிவிடும்.

## அன்னாசியின் தாயகம் எது?

அன்னாசிப் பழம் தோன்றிய இடம் பிரேஸில் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர். கொலம்பஸும் அவர் மாலுமிகளும் மேற்கு இந்தியத் தீவுகளுக்கு ஆய்வுப் பயணம் மேற்கொண்டனர். அவர்கள் கி.பி 1493 ஆம் ஆண்டு முதன் முதலாக இந்தியத் தீவுகள் முதலியவற்றிலும் அன்னாசியைப் பார்த்து ஐரோப்பியர்கள் அவற்றை ஐரோப்பாவிற்கு எடுத்துச் சென்றனர்.

தாவரங்களை நன்கு வளரச் செய்யும் வீடுகளில் இதை வளர்த்து வெற்றி கண்டனர் ஐரோப்பியர்கள். அரச குடும்பத்தினர், செல்வந்தர் ஆகியோருக்கு மிக விருப்பமான பழமாய் ஐரோப்பாவில் புகழ் பெற்றது அன்னாசி.

1860 ஆம் ஆண்டில் வர்த்தக ரீதியில் அன்னாசியை முதலில் உற்பத்தி செய்ய ஆரம்பித்த நாடு, ஆஸ்திரேலியாதான். அதன் பிறகே தென்னாப்பிரிக்கா அப்பழத்தை அதிகம் உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்தியது.

இந்தியாவில் கேரளா, அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களில் அன்னாசிப்பழம் விளைகிறது.

இன்று உலகிலேயே ஹாவாய்தான் இந்தப்பழ உற்பத்தியில் முன்னணியில் இருக்கிறது. ஹாவாயின் அன்னாசிப்பழ உற்பத்தியில் 60% அமெரிக்காவுக்கு அனுப்பப்படுகிறது. உலகில் அதிக எண்ணிக்கையில் அன்னாசிப்பழம் சாப்பிடுகிறவர்கள் அமெரிக்கர்களே ! அதனால் அந்த நாட்டில் சிறுநீரகத்தில் கல் கோளாறு உள்ள நோயாளிகள் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கிறது.

அன்னாசிப் பழத்துண்டுகளை உடலில் தோன்றும் மருக்கள், கால் பாதங்களில் வளரும் ஆணிகள் முதலியவற்றில் வைத்துக் கட்டினால் உடன் பலன் தெரியும். அல்லது பழச்சாற்றையே மேற்கண்ட இடங்களில் தொடர்ந்து தடவிவர வேண்டும்.

அன்னாசி ஜாமாகவும், பழமாகவும் பயன்படுத்தப்படுகிறது. மேலே உள்ள தோலை உரித்த பிறகு கிடைக்கும் 100 கிராம் பழச்சதையில் 50 கலோரியே கிடைக்கிறது. எனவே தினசரி 200 கிராம் பழம் வரை சாப்பிடலாம்.

மலச்சிக்கல் உள்ளவர்களும் சாப்பிட்டது செரிக்காமல் மந்தமாய் இருப்பதாய் உணர்பவர்களும், உணவிற்குப் பிறகு ஒரு தம்ளர் அன்னாசி இரசம் அருந்தினால் உணவு செரிக்கும். நீண்ட நாள் மலச்சிக்கலும் குணமாகும். கர்ப்பிணிப் பெண்கள் அன்னாசியைச் சாப்பிடுவது உகந்ததல்ல. இதில் உள்ள புரொமெலின் என்னும் பொருள் ஆரம்ப நிலையில் உள்ள கருவை அழித்துவிடும். ●





லண்டனில் தரமான தங்கத்துக்கு தாரணி ஜுவல்லர்ஸ் – வெம்பிளி
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதறிப்போனது சிறீலங்காவின் கனவு...

தெற்கு ஆசிய நாடுகளின் மாநாடு (சார்க்) ஜூலை 26 முதல் ஆகஸ்ட் 6 வரை, சிறீலங்காவின் தலைநகரான கொழும்பில் நடைபெறுகின்றது. தெற்கு ஆசிய நாடுகளின் தலைமை அமைச்சர்களும், அதிபர்களும் கலந்து கொள்ளும் மாநாடு என்பதால், பாதுகாப்பு நிலை பற்றிய கவலை மிகுதியாகவே இருக்கும் என்பது இயற்கை. அதிலும் உள்நாட்டுப் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு நாட்டில், பல நாடுகளின் அதிபர்கள் ஒன்று கூடும்போது, அளவற்ற அச்சம் குடி கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

அனைத்து அச்சங்களையும். ஐயங்களையும் உடைத்தெறியும் வண்ணம், தமிழீழ விடுதலைப்புலிகள் ஒருதலையான போர்நிறுத்தத்தை (unilateral ceasefire) அறிவித்தனர். அது வெறும் போர்நிறுத்த அறிவிப்பாக மட்டுமல்லாமல், சார்க் என்னும் அமைப்பு பற்றிய அதன் கருத்தாகவும் அமைந்திருந்தது. சார்க் என்னும் அமைப்பின் தேவையையும், நோக்கத்தையும் வரவேற்றுத் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருந்த அவர்கள், அம்மாநாட்டில் பங்கேற்க வரும் அனைத்து நாடுகளின் தலைவர்களுக்குத் தங்கள் வரவேற்பையும் தெரிவித்திருந்தனர். மாநாடு முடியும் வரை, தாங்கள் எந்த தாக்குதலிலும் ஈடுபடப் போவதில்லை என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர்.

கண்ணியம் மிக்க இந்த அறிவிப்பை அனைத்துத் தெற்கு ஆசிய நாடுகளும், குறிப்பாக சிறீலங்கா அரசும் வரவேற்றுப் போற்றியிருக்க வேண்டும். மாறாக, சிறீலங்கா அரசு, விடுதலைப் புலிகளின் போர்நிறுத்த அறிவிப்பை ஏற்க மறுப்பதாக வெளியிட்டுள்ளது.

என்ன காரணம்?

தங்கள் நாட்டில், பன்னாட்டுத் தலைவர்கள் பங்கேற்கும் மாநாடு ஒன்று நடைபெறும் வேளையில், அமைதி நிலவ வேண்டும் என்றுதானே எந்த ஓர் அரசும் கருதும்! சிறீலங்கா அரசு மட்டும் வேறு விதமாக சிந்திப்பது ஏன்.

சிறீலங்காவின் கணக்கு தவறிவிட்டது என்பதும், அதனுடைய எதிர்பார்ப்பைப் புலிகள் தவிடுபொடியாக்கி விட்டனர் என்பதும்தான் காரணங்கள் ஆகும்.

சார்க் மாநாடு நடைபெறும் வேளையில், புலிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்றும், அவ்வாறு செய்வதால், உலக நாடுகள் அனைத்தும் அதனை ஒரு பயங்கரவாதம் என்றே எடுத்துக்கொள்ளும் என்றும் சிறீலங்கா அரசு எதிர்பார்த்திருக்கும் என்று ஒரு கருத்து உள்ளது.

நுணிகிப் பார்த்தால், அதுவும் சரியான கருத்து ஆகாது. மாநாட்டில் கலந்து கொள்ளும் பிறநாட்டு தலைவர்களின் மீது புலிகள் தாக்குதல் தொடுப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை. அதற்கான தேவையும் இல்லை. அவ்வாறெல்லாம் புலிகள் செய்யமாட்டார்கள் என்பது, எவரைக் காட்டிலும் கூடுதலாகச் சிறீலங்கா அரசுக்குத் தெரியும். எனவே அவர்களின் எதிர்பார்ப்பு அது போன்றதாக இருக்க வாய்ப்பில்லை.

அவ்வாறாயின், போர் நிறுத்த அறிவிப்பால் அரசுக்கு என்ன ஏமாற்றம்? ஏன் அதனை ஏற்க மறுக்கிறது?

ஒருவேளை, போர் தொடர்ந்து நடந்து கொண்டிருக்குமானால், பன்னாட்டுத் தலைவர்கள் தங்கியிருக்கும் பகுதியில் அல்லது மாநாடு நடைபெறும் இடத்தில் குண்டுகள் வெடிக்கக்கூடும்! அரசே கூட அதற்கு மறைமுக ஏற்பாடுகளைச் செய்யலாம் அல்லவா?

ஆனால், யார் செய்தாலும், பழி விழுவது புலிகள் மீதுதானே. அப்படிப்பட்ட ஓர் அறிய வாய்ப்பை அரசு இன்று இழந்துவிட்டது. அதுதான் அரசின் ஆதங்கத்திற்கும், கோபத்திற்கும் காரணம். இனிமேல் குண்டு வெடித்தால், எவரும் புலிகளின் மீது பழிபோட முடியாது. அவர்கள்தான் போர்நிறுத்த அறிவிப்பு செய்துவிட்டனரே!

போர்நிறுத்த அறிவிப்புச் செய்துவிட்டுத் தாக்குதல் நடத்த மாட்டார்களா என்று கேட்கலாம். புலிகள் அப்படிச் செய்யமாட்டார்கள் என்பதை ராஜபக்சேவே நன்கு அறிவார்.

எனவே, புலிகளின் போர்நிறுத்த அறிவிப்பு, அவர்களின் மதிப்பை உலக அரங்கில் உயர்த்தியுள்ளது. இராணுவத்தில் மட்டுமில்லை, இராஜதந்திரத்திலும் அவர்கள் புலிகள் என்பதே அரசியல் நோக்கர்களின் கருத்தாக உள்ளது.

சுப வீரபாண்டியன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அகராதி...

- தற்காலத் தமிழுக்கு என்றே உருவாக்கப்பட்ட முதல் அகராதி.
- தற்காலத் தமிழில் உள்ள சொற்களை எடுத்துக்காட்டு வாக்கியங்களோடு விளக்கும் முதல் அகராதி.
- தற்காலத் தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலச் சொல்/ விளக்கம் தந்திருக்கும் முதல் அகராதி.

இந்தப் பதிப்பு...

- 1990க்குப் பிறகு தமிழ்ச் சொற்களில் நிகழ்ந்த மாற்றங்களைப் பதிவுசெய்யும் புதிய பதிப்பு.
- 75 லட்சம் தமிழ்ச் சொற்களைக் கொண்ட சொல்வங்கியின் உதவியுடன் உருவாக்கப்பட்ட புதிய பதிப்பு.
- தற்கால மொழியியல், அகராதியியல் அறிவையும் தற்காலத் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட புதிய பதிப்பு.
- தொடக்கம்முதல் இறுதிவரை எல்லாக் கட்டங்களிலும் கணிப்பொறியைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டிருக்கும் புதிய பதிப்பு.

இதில்...

- 21,000 தலைச்சொற்கள்.
- 38,000 எடுத்துக்காட்டு வாக்கியங்கள்/தொடர்கள்.
- 1,700 இலங்கைத் தமிழ் வழக்குச் சொற்கள்.
- 342 சொற்களுக்கான படங்கள்.




கிடைக்குமிடம் : திருமுருகன் அறிவகம்

மற்றும்

Best Food-ன் அனைத்து கிளைகளிலும் கிடைக்கும்

Wembley, Middlesex, West Croydon, Hounslow

London

Euro Travels & Tours Ltd

சிறந்த வாகன வசதியும் சிறந்த தங்குமிடமும் ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்

Chennai

ARS Tours

சுற்றுலா துறையில் 40 வருட அனுபவம்

Euro Travels-ன்

மற்றுமொரு சேவை

லண்டனில் இருந்து சென்னைக்கு போகிறவர்களுக்கு


விமான நிலையத்துக்கு

வாகன வசதி

தங்கும் வசதி

தமிழ் நாட்டை சுற்றி பார்க்கும் வசதி

நல்ல முறையில் ஏற்பாடு செய்ய தொடர்பு கொள்ளவும்



தமிழில் தொடர்பு கொள்ள

தி. அருள்தாஸ்



111-B Loampit Vale Lewisham London SE13 7TG

Tel : 020 8465 9666 Fax : 020 8465 9888

லண்டனில் தரமான தங்கத்துக்கு தாரணி ஜுவல்லர்ஸ் – வெம்பிளி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் விளம்பர உறுதுணையாளர்களை ஆதரியுங்கள்

ESTD 1992

**SRIKANTH & CO.**

Solicitors & Property Business Centre

**Solicitors & Estate Agents**

**Property Sales, Letting & Conveyancing**

557 High Road, Wembley, Middlesex HA0 2DW

Tel : 020 8795 0648

Fax : 020 8795 0649 / Mob : 07831 195 979

We also practise in the following areas of LAW:

- Immigration
- Wills & Probate
- Conveyancing - Residential
- Conveyancing - Commercial
- Londlord & Tenant
- Liquor Licensing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matters
- Welfare Matters

**எவரெஸ்ட்**

Curry King

அசத்தலான அசைவ சுவைக்கு

Breakfast Lunch Dinner

24 Loampit Hall Lewisham SE13 7SW

Tel : 020 8691 2233

லண்டனில் பொற்கை வண்ணர்களின் நிர்வாகத்தில்இயங்கும் ஒரே நகை மாடம்



**MIERRA**

Jewellery Mart

*Gems & Jewellery*

34 London Road, Tooting

London SW 17 9HP

**Tel : 020 8648 7750**

Mobile : 07958948685

www.meera_jewellery.com

புதிய ஷோரூமில் நாங்கள்



**Maharasie Jewellers**

14 Lompait Hill Lewisham

London SE13

**Video Audio**

Tamil, Malayalam, Hindi, Telugu Films, Tele Drama Devotional Carrnatic, Classical Cd's Tamil Magazines, News Papers, Phone Cards

மங்கையரின் மனங்களைக் கொள்ளை கொள்ளும் நவநாகரீக நகைகளின் தங்கச் சுரங்கம்

வெம்பிளியில் இன உணர்வான மளிகை கடை

*Malar Supermarket*

543- High Road, Wembley Middlesex, Hao 2 DJ

**Tel : 020 8795 5797**

உங்கள் சகல தேவைகளையும் பூர்த்தி செய்கிறது

24 மணி நேர சேவையில் ஒரு மளிகை கடை

**மலர்**

**சூப்பர் மார்க்கெட்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Tooting-ல் தமிழருக்கான கடை
Prime Food & Wine
118, Tooting High Street
London SW 17 ORR
Tel : 020 8682 3777
நம்மவரின் வசதிக்கேற்ப
எமது கடையை
விஸ்தரித்துள்ளோம்.
உங்களுக்கு வேண்டிய
சகல தெரிவுகளும் எங்கள்
புதிய காட்சியறையில் உள்ளன.
VAANI


இலண்டனில் தரமான தங்கத்திற்கு
PATHMINI
JEWELLERS
892 London Road
Thornton Heath Surrey CR7 7PB
Tel : 020 8665 1111
Fax : 020 8664 8999


Tooting Diamonds-ஐ
Mithus Jewellery-யுடன்
இணைத்துள்ளோம்
MITHUS
Jewellers
322-324 London Road
Croydon CRO 2TJ
Tel : 020 8683 1756
Fax : 020 8683 1792


லண்டனில் No 1
தமிழ் மொத்த வியாபாரக் கடை
Vaani Cash & Carry
பிரமாண்டமாய் ! பிரமாண்டமாய் !
தயாரிப்பாளரிடம் இருந்து
நேரடியாக
வாடிக்கையாளருக்கு
தொலைபேசி இலக்கம்
0208 668 7648